
திருவள்ளுவராண்டு — 2054 10.05.2023

# உலகத்தமிழ்

இதழ் – ளஎகூ (179)

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்



அறனறிந்து வெஃகா அறிவுடையார் எனத் தொடங்கும் அருங்குறள் நூற்று எழுபத்து ஒன்பது
திறனறிந்து தீந்தமிழில் உலகெலாம் உலா வரும் உலகத் தமிழிதழ் நூற்று எழுபத்து ஒன்பது

# உள்ளடக்கம்


4 கொள்கை விளக்கக் குறிப்பு

5 நூலேணி

6 தமிழெழுச்சி

7 ஆசிரியம்—பரிதாபமாய் அழியும் பறவைக் கூட்டங்கள்!

8 அவ்வப்போது

9 மாண்புமிகு அமைச்சர் சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரை!

10 தேன்துளி

11 சேரமன்னர் வரலாறு

12 ஆங்கிலம் அரும்பிய அரசும்—வாழ்வும்!

13 தனித்தமிழ் மாட்சி

14 South Indian Celebrities

15 அகநானூறு ஆங்கிலம்!

16 குழந்தைக் கம்பன்!

17 பதிகங்களைப் படியுங்கள்!

# உள்ளடக்கம்


18 ஆய்த எழுத்து!

19 வள்ளுவம்!

20 தமிழன்னை நான்மணிமாலை

21 பொருளைத் திறம்படச்செய்க!

22 A Case of varicella myocarditis with c c f with post infectious glomerulonephritis!

23 Bharathan In Kamba Ramayanam

24 பூ மழை

26 மைதிலி சரண் குப்தரின் ‘பஞ்சவடி’

27 ஒரு சர்வாதிகாரியின் மறுபக்கம்

28 எல்லாம் தமிழ்!

29 அறிவரசன் துணையகராதி!

30 புகழ் வணக்கம்!

33 இருமொழித் தோரணம்!

## இயல் – 7

## செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை

### சாதனைகள்

- பல்வேறு சங்க இலக்கிய நூல்கள், பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன.
- திருக்குறள் பல்வேறு உலக மொழிகளிலும், இந்திய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்படுகின்றன. அவ்வகையில், திருக்குறள்: ஆங்கிலம், தெலுங்கு. கன்னடம், மணிப்புரி, குஜராத்தி, பஞ்சாபி, இந்தி, சமஸ்கிருதம், ஒடியா, உருது, அரபு, மலையாளம், மராத்தி, வாக்ரிபோலி, நேபாளி ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.
- பல்வேறு பன்னாட்டு மற்றும் தேசியக் கருத்தரங்குகள் கல்வி நிறுவனங்களுடன் இணைந்து நடத்தப்பட்டுள்ளன.
- தொல்காப்பியம், நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை, கீழ்க்கணக்கு நூல்கள் ஆகிய நூல்கள் ஆங்கில மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.
- சங்க இலக்கியம் முழுவதும் கன்னட மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.
- தொல்காப்பியம் இந்தி மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
- இறையனார் களவியல், ஐங்குறுநூறு ஆகிய நூல்கள் செம்பதிப்புகளாக வெளியிடப்பட்டுள்ளன.
- 257 முனைவர் பட்ட மாணவர்களுக்கும் 41 முனைவர் பட்ட மேலாய்வாளர்களுக்கும் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளன.
- திருவாரூர் மத்தியப் பல்கலைக்கழகத்தில் செம்மொழித் தமிழ் பயிலும் மாணவர்களுக்குத் திங்கள்தோறும் ரூ.3000/– உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.
- செம்மொழிப் பயிலரங்குகள் (22 பயிலரங்குகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன)

## CHAPTER – 7

## CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL, CHENNAI

### Achievements

- Several Sangam literary books are being published and released.
- Tirukkural has been translated into major World languages and Indian languages. Accordingly Tirukkural has been translated into English, Telugu, Kannada, Manipuri, Gujarati, Punjabi, Hindi, Sanskrit, Oriya, Urdu, Arabic, Malayalam, Marathi, Vagriboli and Nepali.
- Various international and national seminars have been conducted in association with eminent educational institutions.
- Tolkäppiyam (The most ancient Tamil grammar extent, by Tolkäppiyanar), Narrinai, Kuruntokai Puranāņūru, Pattuppattu (Ten Anthologies), Cilappatikāram, Manimēkalai, Kilkkanakku nulkal (The Eighteen Lesser Texts) have been translated into English.
- The entire Sangam literature has been translated into Kannada language.
- Tolkaappiyam has been translated into Hindi language.
- Iraiyanar Kalaviyal, Ainkurunuru have been published in Critical editions.
- Scholarships have been given to 257 doctoral researchers and 41 post-doctoral fellows.
- A scholarship of Rs.3000/- (per student) per month have been provided to those who are pursuing Post graduation in Classical Tamil at Central University, Thiruvarur.
- Classical Tamil Workshops (22 workshops have been completed)

*வளரும் . . . .*



# நூலேணி

15

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்




நூலின் பெயர் : தொல்காப்பியம் –எழுத்ததிகாரம்– உருபியல்
நூலாசிரியர் : ஆ. சிவலிங்கனார்
பதிப்பாண்டு : 1982
விலை : ரூபாய் 12/–
பக்கங்கள் : 260
வெளியீட்டு எண்: 57




நூலின் பெயர் : திவ்வியப் பிரபந்தத்தில் மனம்
நூலாசிரியர் : கரு. நாகராசன்
பதிப்பாண்டு : 1982
விலை : ரூபாய் 12/–
பக்கங்கள் : 260
வெளியீட்டு எண் : 58




நூலின் பெயர் : தொல்காப்பியம் –எழுத்ததிகாரம்– உயிர்மயங்கியல்
நூலாசிரியர் : ஆ. சிவலிங்கனார்
பதிப்பாண்டு : 1982
விலை : ரூபாய் 120/–
பக்கங்கள் : 248
வெளியீட்டு எண் : 59




நூலின் பெயர் : திருமயிலை உலா
நூலாசிரியர் : மு.கோ. ராமன் (பதி)
பதிப்பாண்டு : 1983
விலை : ரூபாய் 7/–
பக்கங்கள் : 120
வெளியீட்டு எண் : 60

மேனி யழகினிலும், விண்டுரைக்கும் வார்த்தையிலும்

கூனி யிருக்கும் கொலுநேர்த்தி தன்னிலுமே,

வானரர்தஞ் சாதிக்கு மாந்தர் நிக ராவாரோ?

ஆன வரையும் அவர் முயன்று பார்த்தாலும்,





. . . . . . . . . . . . . . . . . . . . . . . . .இன்னமும்

சிந்தனா சக்தி சிறிதுமின்றி மக்களுக்குத்

தம்தோள் உழைப்பிலே நம்பிக்கை தானுமின்றி

ஊறும் பகுத்தறிவை இல்லா தொழித்துவிட்டுச்

சாரற்ற சக்கைகளாய்ச் சத்துடம்பைக் குன்றவைத்துப்

# பரிதாபமாய் அழியும் பறவைக் கூட்டங்கள் !



இன்னமுதைக் காற்றினிடை எங்கும் கலந்து தரும்; மின்னல் சுவைதான் மெலிதாய் மிகவினிதாய்ப் பாடிவரும் பறவைக் கூட்டம். காலை இளம் பரிதி வீசும் கதிர்களிலே எதிரே சேர் மணி போன்றுக் கூடிக் குலவிச் செல்லும் கூட்டமாய்ப் பறவையினங்கள். சோலை அருகினில் சொக்க வைக்கும் குரலில் வானமே சொந்தமென வாய்ப்பாடி வலம் வரும் கோலப் பறவைக் கூட்டம்—இனிக் காண முடியுமோ என்ற அச்சம் வரத் தொடங்கியுள்ளது. இந்த ஆண்டு சுமார் ஐந்து கோடிப் பறவைகள் கொடுமையான எச்5 என்1 என்ற பறவைக் காய்ச்சல் உண்டாக்கும் தொற்றுநோய் வைரஸ் கிருமிகளால் வையகத்தை விட்டு மாண்டு மடிந்துள்ளன. என சிஎஸ்ஐஆர் அறிக்கை வெளியிட்டது. நெஞ்சைப் பதற அடிக்கிறது. மிகவும் கொடிய வைரஸான இந்த வகை, ஈவிரக்கமின்றிப் பல கோடிப் பறவைகளை உலகெங்கும் கொன்று குவித்துள்ளது என்பது உள்ளத்தை உலுக்குகின்றது. இந்த மிகப்பெரும் பேரழிவினால் அறிவியல் உலகம் அனைத்து நாடுகளையும் எச்சரிக்கையுடன் இருக்க ஆணையிட்டுள்ளது. இந்த வைரஸ் கிருமி சில விலங்குகளையும் மனிதர்களையும் தாக்கும் அபாயம் இருக்கலாம் என்றும் குறிக்கின்றது. பறவைக் காய்ச்சல் வைரஸ்களில் பல பிரிவுகள் இருந்தாலும் எச்5 என்1



என்ற இந்த வைரஸ் பிரிவுதான் மிகவும் ஆபத்தானதாகவும் பல பறவை இனங்களை அழித்துள்ளதாகவும் விஞ்ஞானிகள் கருதுகின்றனர். 2022ஆம் ஆண்டு முதல் உலகெங்கிலும் இதுவரை சுமார் 100 மில்லியன் பறவைகள் தாக்கப்பட்டதாகவும் அவற்றில் 50 மில்லியன் பறவைகள் இருந்திருக்கலாம் எனவும் கணக்கிட்டுள்ளனர். இந்த எச்5 என்1 எந்தப் பறவையையும் தாக்கலாம் என்றாலும் சில காட்டுப் பறவையினங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுப் பரிதாபமாய் இறந்துள்ளன. ஏற்கனவே அழிந்து வரும் இனமாய் இருந்த தனிப்பட்ட பறவைக் கூட்டங்கள் மிக மோசமாக அழிந்துள்ளன. கழுகு, பருந்து, வான்கோழி, நீர் நாய் என்பவை, சீகல்ஸ், ஃபால்கன் பறவைகள் மற்றும் கடற்கரைப் பறவையினங்கள் என இவைகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிட்டன. பறவைப் பண்ணைகளில் வளரும் பறவைகள் மொத்தமாக இறப்பது அமெரிக்கா போன்ற நாடுகளில் அதிகம் நடந்து வருகின்றன. குறிப்பாக இந்தப் பறவைகளே அதிகம் தாக்கப்படுவதற்குக் காரணமாக, இந்த வைரஸ்களுக்கு இந்தப் பறவைகள் வாழும் இடம் தகுந்த சூழலாக இருப்பதும், புவியியலின் மாற்றம் மற்றும் இத்தகைய பறவைகளின் இடம் மாற்றம் அடைந்ததனாலும் இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. சமீபத்தில் கலிபோர்னியா கான்டக்ஸ் எனக் கூறப்படும் மிக அரிதான பறவை இனத்தின் 20 பறவைகள் மொத்தமாக இறந்ததும் அவைகளில் எச்5 என்1 வைரஸ் இருந்ததும் கண்டறியப்பட்டது, பெருங் கவலை ஏற்படுத்தியுள்ளது. எச்5 என்1 வைரஸ் பால்டு கழுகுகள் இனத்தையும் காஸ்வியன்டர்ன் என்ற இனத்தையும் சென்ற ஜனவரி 2022–லிருந்து இதுவரை 7 சதவீதம் பாதித்துள்ளன. 2022–ஆம் ஆண்டு இஸ்ரேலில் ஆயிரக்கணக்கான



பருந்து இனப் பறவைகள் பாதிக்கப்பட்டு மரணித்துள்ளன. தென்னாப்பிரிக்கப் பென்குவின்கள் இதே வைரஸினால் இருபதுக்கு மேல் சமீபத்தில் இறந்துள்ளன. மேலும், கவலைக்குரிய ஆய்வுச் செய்தி என்னவெனில் இந்தப் பறவைக் காய்ச்சல் வைரஸ் மெதுவாக மற்ற விலங்குகளையும் கொல்லத் தொடங்கியுள்ளது. கடல் சிங்கங்கள், நரிகள் மற்றும் கரடிகளும் இந்த நோயினால் நலிவுற்று மரணம் அடைகின்றன. சில நாடுகளில் வீடுகளில் வளர்க்கப்படும் நாய் மற்றும் பூனைகளிலும் கண்டறியப்பட்டுள்ளன. பறவைகளிலிருந்து இந்த வைரஸ் விலங்குகளையும் பாதிப்பது, ஆய்வாளர்கள் இடையே பெரும் அச்சத்தை விளைவிக்கின்றது. மனிதர்களையும் பாதித்து 60 விழுக்காடு இறப்பு விகிதத்தைச் சென்ற ஆண்டு கண்டறியப்பட்டது, பெரிதும் பேசப்பட்டது. சென்ற மாதம் ஈக்வடார், கம்போடியா மற்றும் சில நாடுகளில் மனிதர்களும் பறவைக் காய்ச்சல் வைரஸினால் மரணம் அடைந்துள்ளனர். உலக சுகாதார நிறுவனம் இந்த வைரஸ் மனிதர்களிடையே வேகமாகப் பரவுவதில்லை என நம்பிக்கைத் தெரிவித்துள்ளது. இருந்தாலும், பறவைகளையும் விலங்குகளையும் இந்த வைரஸ் பரவுவதில் இருந்து காப்பது மூலம் நம்மைச் சார்ந்த புவியில் வாழும் பிற உயிர்களையும் காப்பது நம் கடமையாகும். தடுப்பூசிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அரிய வகைப் பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் தவறாமல் தடுப்பூசி செலுத்துவதற்கு மிகவும் கடினமாக இருப்பதும் பெரிய கவலைக்குரியதாக உள்ளது. மேலும், சுற்றுச்சூழல் அபாயமாக விளங்குகின்றது. உயிரியல் பாதுகாப்பு முறைகளை வலுப்படுத்த ஆவன செய்யப்படுவதன் மூலம் உலகத்தின் இயற்கை வளம் இனிதே காக்கப்படும் என்பதில் ஐயமில்லை.




தொல்காப்பியம் காலப்பழைமையும் கருத்துச் செழுமையும் கொண்ட ஒரு கருவூலமாகும். பழைமையான நூல் இலக்கணப் பனுவலாக தமிழ்மொழிக்கு வாய்த்திருப்பது பெரும் பேறாகும்.

தொல்காப்பியத்துக்கு முன்னரே இலக்கிய இலக்கண நூல்கள் பலவாக இருந்தன. முன்பு நூல் கண்டு உரைப்பட எண்ணி புலன் தொகுத்தார் என்றே பாயிரம் சொல்கிறது. எழுத்து, சொல், பொருள் என அமைத்துக்கொண்டு ஒன்பது இயல்கள் என்ற ஒழுங்கினதாய் இருபத்தேழு இயல்களாக, 1610 நூற்பாக்கள் கொண்டு தொல்காப்பியத்தைத் தொல்காப்பியர் படைத்தார். தொல்காப்பியம் முழுமையும் முதற்கண் 1891–இல் பதிப்பித்த பெருமை யாழ்ப்பாணம் சி.வை.தாமோதரம் பிள்ளையைச் சாரும்.

தொல்காப்பியத்துக்குப் பின்னர் இருபதுக்கு மேற்பட்ட இலக்கண நூல்கள் பிறந்தன. தொல்காப்பியம் வழங்கிய தொல்காப்பியரே தமிழுக்கு ஆதி பகவன் என்று சொல்வது மிகையாகாது. 1963–இல் பேரறிஞர் அண்ணா, தொல்காப்பிய ஆங்கில மொழியாக்கத்தின் முன்னுரையில், தனக்கே உரிய எழிலார்ந்த நடையில் தொல்காப்பியத்தைப் பற்றி அவர் குறித்த வரிகள் என்றும் நீடித்து நிலைத்திருக்கும் புகழ் வரிகளாகும்.

ஒப்பில்லாத முயற்சியாலும், தமிழ் வளர்ச்சித் துறையின் பெருந்துணையாலும் 7 அடி உயர பீடத்தில் (படம்) அமைக்கப்பட்டுள்ள வெண்கலச்சிலையால் தொல்காப்பியரின் பெருமை ஒல்காப் புகழ் பெறுகிறது.

சித்திரை முழுமதி நாள் 05.05.2023 வெள்ளிக்கிழமை அன்று காலை 9.15 மணிக்கு சென்னை மெரினா எதிர்புறம் சென்னைப் பல்கலைக்கழக இணைப்பு கட்டட வளாகத்தில் (திருவள்ளுவர் சிலை எதிர்புறம்) அமைந்துள்ள தொல்காப்பியரின் திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், வணக்கத்திற்குரிய மேயர், வணக்கத்திற்குரிய துணை மேயர், சீர் பெருமக்கள், தமிழறிஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மலர் வணக்க நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.







# மாண்புமிகு அமைச்சர் சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரை!

மாண்புமிகு தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் 06.04.2023 அன்று சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரையின் தொடர்ச்சி . . . .

தமிழ் எழுத்துகள் மாறியிருக்கின்றன.

தமிழ் உணர்வுகள் மாறவில்லை.

தமிழ் ஜீவநதியாக இருக்கிறது.

எனவேதான். தமிழினுடைய இளமை ஈராயிரம் ஆண்டுகளாக இருந்தாலும், மனோண்மணியம் சுந்தரனார் அவர்கள்.

"கன்னடமும் களிதெலுங்கு கவின்மலையாளமும் துளுவும்

உன்உதரத்து உதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்

ஆரியம்போம் உலக வழக்கு அழிந்தொழிந்து சிதையாஉன்

சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே"

என்று பாடினார்கள்.

செவ்வியல் இலக்கிய மொழிகளில் இன்றைக்கும் தன்னுடைய செவ்வியல் தன்மை பதினாறையும் இழக்காமல் இருக்கக்கூடிய அந்த மொழியை தொடர்ச்சியாகக் காப்பாற்றக்கூடிய அந்தப் பெருமையை நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செய்தார்கள். அது வெறும் தமிழ்த்தாய் பாடல் மட்டுமல்ல. இந்த உணர்வுமிக்க பாடல்தான் தமிழ்நாட்டின் மாநில பாடல் என்று அறிவித்திருக்கக் கூடிய பெருமை எங்கள் முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது. எனவேதான். இதை அடுத்த கட்டத்திற்கு கொண்டுபோக வேண்டுமென்று இந்த மொழி கணினிமொழியாக, நம்முடைய கணினியிலே வரக்கூடிய மொழியாக, கணினியில் பயன்பாட்டு மொழியாக வர வேண்டுமென்பதற்காக மாநாடுகளைக் கூட்டி தற்போது பன்னாட்டு மாநாடுகளையும் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

எனவே. தமிழ் மொழியினுடைய வளர்ச்சிக்காக இந்தக் கழகமும். நம்முடைய ஆட்சியும் தொடர்ந்து செயல்பட்டுவருகிறோம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே,

நான் என்னுடைய உரையினை உங்களது அனுமதியோடு நிறைவு செய்து, இந்த இரண்டு துறைகள் சார்பாக என்னுடைய அறிவிப்புகளை தற்போது செய்ய விரும்புகிறேன்.

தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) அறிவிப்புகள்

1. ஐந்து தமிழ் எழுத்தாளர்களின் நூல்கள் நாட்டுடைமை செய்து பரிவுத் தொகையாக ரூபாய் 45 இலட்சம் வழங்கப்படும்.
2. ஒரிசா மாநிலத்திலுள்ள புவனேஸ்வர் தமிழ்ச் சங்க கட்டட விரிவாக்கப் பணிகளுக்கு தமிழ்நாடு அரசு சார்பில் ரூபாய் 15 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும்.
3. மொழிஞாயிறு தேவநேயப்பாவாணரின் திருவுருவச் சிலையும் மற்றும் பாவாணர் கோட்டமும் சென்னையில் அமைக்கப்படும். இதற்கென ரூபாய் 3 கோடியே 50 இலட்சம் வழங்கப்படும்
4. அனைத்து மாவட்டங்களில் உள்ள கல்லூரி மாணவர்கள் பயன்பெறும் வகையில் திங்கள்தோறும் இளையோர் இலக்கியப் பயிற்சிப் பாசறை நடத்தப்படும். இதற்கென ரூபாய் 38 இலட்சம் வழங்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.







## தேன்துளி — 1



தமிழர் பண்பாடு அருமையானது; அரிதானது. அனைவரும் ஏற்றுக் கொள்ளும் நிலையில் உள்ளது. நமது இலக்கியங்களும் கலைகளும் எடுத்தியம்பும் அரிய பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டது. தமிழர் இனம் உலகின் தனித்துவம் பெற்ற இனம் என்பதற்கு அவர்கள் உலக மக்கள்




ஏற்றுக் கொள்ளக் கூடிய உயர்வான வாழ்வியல் உண்மைகளையும் கருத்துக்களையும் தங்களின் வாழ்வோடு ஒன்றியதாகச் செயற்படுத்தியப் பாங்கை ஆராயும்போது அறிய முடிகிறது. மறுமையை ஏற்றுக் கொண்ட நிலையிலும் இம்மை வாழ்வே சிறந்த வாழ்வு எனத் தமிழர் கருதினர்...

## தேன்துளி — 2

எல்லோரிடமும் அன்பு பாராட்டி வாழ்தலே பண்பு.

பழியைக் கண்டும் தீமையைக் கண்டும் வெட்கித்தல் தமிழன் பண்பு; சமுகத்திற்குப் பயனுள்ள நற்செயல்களைச் செய்தலும் தமிழரின் பண்பு.




பண்பாட்டோடு இணைந்தது நட்பு. நட்புப் பாராட்டல் என்பதும் தமிழரின் முதன்மையானச் செயலாக இருந்துள்ளது.



களிறொன்று மாலை சூட்டிக் கரிகாலனை சோழனாக்கிற்று என்று பழமொழி யென்னும் நூல் கூறுவது போலத் திரிலோசனைக் கடம்பன் கடம்ப வேந்தனானான் என்றொரு வரலாறும் உரைக்கப்படுகிறது.

இவர்கள், தொடக்கத்தில் கொண்கானத்திலும், வானவாசியிலும், குடகு நாட்டிலும், கருநாடகப் பகுதியிலும், இறுதியில் ஆந்திர நாட்டிலும் அரசு புரிந்திருக்கின்றனர் அன்றோ ? இவர்களது வரலாறு கண்டோர், இவர்களைக் கோவாக் கடம்பர், வான வாசிக் கடம்பர் பாயல் நாட்டுக் கடம்பர், கலிங்கக் கடம்பர் எனப் பலவகையாகப் பிரித்துக் கொண்டு கூறுகின்றனர். குடகுநாட்டு வேந்தரைப் பாயல் நாட்டுக் கடம்பர் என்பர்; அக் குடகு நாட்டுக்குப் பண்டைப் பெயர் பாயல் நாடு என்பதாகும். ஏழில்மலைக்கும் கோகரணத்துக்கும் இடையில், மேலைக் கடற்கரைப் பகுதியாக இருக்கும் கொண்கானத்தின் வட பகுதியைப் பங்களநாடு என்பராகலின், அங்கு வாழ்ந்த பங்கள் வேந்தர் பங்களக் கடம்பர் எனப்பட்டனர். இக் கடம்பர்கள் மிக்க சிறப்புடன் வாழ்ந்த காலம் கி.பி. பதினொன்று பன்னிரண்டாம் நூற்றாண்டுகள்; இவர்களது ஆட்சியும் இடைக்காலச் சோழவேந்தர் ஆட்சிபோல மிக்க சிறப்பாகவே இருந்திருக்கிறது.

இக் கடம்பர்கள் தொடக்கத்தில் வட கன்னட நாட்டுக் கோவாத் தீவு முதல் தென் கன்னட நாட்டுக் கடம்பத் தீவு ஈறாகவுள்ள தீவுகளில் இருந்துகொண்டு, கடற்குறும்பு செய்வதும், கரையிலுள்ள நாட்டில் நுழைந்து அரம்பு செய்வதும் மேற்கொண்டிருந்தனர். அவரது குறும்பைப் பொறாத நாட்டு மக்கள் இமயவரம்பன் பால் முறையிட்டனர். இவன் தக்கதொரு கடற்படை கொண்டு கடம்பர் வாழ்ந்த தீவுக்குட் சென்று அவர்களைக் கடுமையாகத் தாக்கி வென்றான்.

அவர்களது காவல் மரமான கடம்பையும் வெட்டி வீழ்த்தித் தங்கள் தமிழ் முறைப்படியே முரசு செய்து கொண்டு வந்தான்.




 பணிந்தொடுங்கிய கடம்பர்கள் சேர நாட்டு எல்லையில் இருந்த தீவுகளின் நீங்கி வட பகுதியிலுள்ள தீவுகட்குச் சென்று ஒடுங்கினர். மேனாட்டு யவனர்கள் குறிக்கும் கடற் குறும்பர்கள் இக் கடம்பர்களே யாவர்.

கடற்குறும்பு செய்த கடம்பரை வென்ற வெற்றியினை இமயவரம்பன் தன் மாந்தை நகர்க்கண் சிறப்புடன் விழாக் கொண்டாடினான். சேரநாட்டிற் பல பகுதிகளினின்றும் வேந்தர்களும் தலைவர்களும் சான்றோர்களும் வந்து கூடியிருந்தனர். விழாவிறுதியில் இமயவரம்பன் எழில்மிக்க யானையொன்றின் மேல் திருவுலாச் செய்தான்.

அக் காட்சியினை அங்கு வந்திருந்த சான்றோரும் கண்ணனார் கண் குளிரக் கண்டார்; அவர் கருத்தில் முருகவேள் கடலகத்தே மா மரத்தைக் காவன் மரமாகக் கொண்டிருந்த சூரன் முதலியோரை வென்று விழாச் செய்த நிகழ்ச்சி தோன்றிற்று. அதன் பயனாக அவர் இமயவரம்பனை அழகிய பாட்டொன்றால் சிறப்பித்தார்.

“மாக் கடல் நடுவில் இருக்கை அமைத்துக் கொண்டு அதன்கண் மாமரம் ஒன்றைக் காவன் மரமாகப் போற்றி வந்த அவுணர்கள், தீமை செய்தது பற்றி, கடல் நடுவண் சென்று அவர் தம் அரண்களை அழித்து அம் மாமரத்தையும் தடிந்து ஊர்களைத் தீக்கிரையாக்கி வாகைசூடி வந்த முருகவேள், தான் பெற்ற வெற்றிக் குறியாகப் பிணிமுகம் என்னும் யானைமேல் அமர்ந்து உலாவந்தாற் போல, கடம்பரது அரணை அழித்து அவர் பலராய் மொழிந்து காத்த கடம்பரத்தைத் தடிந்து அதனாற் போர்முரசு செய்து போந்த சேரலாதனே ! தென் குமரிக்கும் வட இமயத்துக்கும் இடைநிலத்து வேந்தர் மறம்கெடக் கடந்து யானையூர்ந்து சிறக்கும் நின் செல்வச் சிறப்பைக் கண்டு யாங்கள் பெருமகிழ்ச்சி எய்துகின்றோம்.

*வளரும் . . .*



# ஆங்கிலம் அரும்பிய அரசும் - வாழ்வும்... !

வழக்கியல் வல்லுநர் செந்தமிழ்த்திலகம் திரு. செல்லத்தம்பி
சிறீக்கந்தராசா, இலண்டன் மாநகரம்

116

## போலநினைத்தலும் போலச் செய்தலும் ஒப்புமையாக்கமும்

### Linguistic analogy

ஒலியில் ஒத்திருக்கின்ற சொற்களை ஒரேவிதமாக எழுத்துக்கூட்ட வேண்டும் என்று மனிதர் நினைப்பது இயல்பு. Kick என்பதன் இறந்தகால வடிவம் Kicked என்று இருப்பதால், Lick என்பதன் இறந்தகால வடிவம் Licked என்று இருப்பதால், Wreck என்பதன் இறந்தகால வடிவத்தை Wrecked என்றும், Check என்பதன் இறந்தகால வடிவத்தை Checked என்று ஒலிப்பதும் எழுதுவதும் சொல்லாமலே நாம் செய்கின்ற போலச்செய்யும் பழக்கம்; அதாவது ஒப்புமையாக்கம் செய்கின்ற பழக்கம்; அதாவது ed என்ற எழுத்துக்களை ஈற்றில் சேர்த்தால், நிகழ்காலச்சொல் இறந்தகாலம் ஆகிவிடும் என்று பழக்கப்பட்டுச் செயற்படுவது, போலச்செய்யும் பண்பின் பாற்பட்டதே.

இந்த மனித இயல்பினாலேதான் Drink என்பதன் இறந்தகால வடிவத்தை Drinked என்றும், Buy என்பதன் இறந்தகால வடிவத்தை Buyed என்றும், Put என்பதன் இறந்தகாலவடிவத்தை Putted என்றும் ஆங்கிலச் சிறார்கள் சொல்கிறார்கள் என்று மொழியியல் அறிஞரான ஒற்றோ யெஸ்பர்சன் (Otto Jesperson) கூறுகின்றார்.

இந்தப் போலச்செய்யும் இயல்பு, பேச்சில் மட்டுமன்று, எழுதும் போதும் உண்டு என்பதற்கு, ஆங்கில மொழியில் எடுத்துக்காட்டுக்கள் பல உண்டு. ஆங்கில எழுத்துக்கூட்டும் முறையின் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் பல உதாரணங்களைக் காணமுடியும்.

தமிழ்மொழியில் கூட அவ்வாறான சில சொற்றொடர்கள் உண்டு. நன்மை தின்மை, குற்றவாளி சுற்றவாளி, சொத்துப் பத்து என்ற சொற்கூட்டங்கள் அவ்வாறு ஒப்புமையாக்கத்தின்மூலம் (Analogy) தோன்றிய சொற்கூட்டங்கள்தாம். மேற்படி சோடிகளில் தின்மை என்று ஒரு சொல் இல்லை. தீமை என்பதே ஒப்புமை யாக்கத்தின் மூலம் தின்மையாகிவிட்டது. அவ்வாறே சுற்றவாளி என்று ஒரு சொல் இல்லை. சுத்தவாளி என்ற சொல்லே ஒப்புமையாக்கத்தின் மூலம் சுற்றவாளி என்று ஆகிவிட்டது. "சொத்துப் பத்து" என்பதில் “பற்று” என்பதே "பத்து" என்று ஆகிவிட்டது. பற்று என்றால் செல்வம் என்பது கருத்து.

"பற்றற்ற கண்ணும் பழைமை பாராட்டுதல் சுற்றத்தார் கண்ணே உள” என்ற குறளில் பற்று என்பது செல்வத்தைக் குறிக்கின்றது.

ஆங்கில மொழியில் பல சொற்கள் குறிப்பிட்ட ஒரு முறையில் எழுத்துக் கூட்டப்படுகின்றன. அதற்கும் ஒரு வரலாறு உண்டு.

உதாரணமாக Would, Should, Could என்ற சொற்களை எடுத்துக்கொள்வோம். இந்த மூன்று சொற்களும் இன்று ஏறத்தாழ ஒரேவிதமாகத் தோன்றுகின்றன. அதாவது அவை மூன்றும் “ould” என்று முடிகின்றன.

தொடக்க காலங்களில், அதாவது பழைய ஆங்கிலத்தில் could என்ற சொல்லில் “எல்” (“l”) என்ற எழுத்து இருக்கவில்லை. அது cude என்றுதான் இருந்தது. ஆனால் மற்ற இரண்டு சொற்களிலும் “எல்” (“l”) என்ற எழுத்து இருந்தது. அதாவது அவை “wolde” என்றும் “sholde” என்றும் இருந்தன. நடுநிலை ஆங்கிலக் காலத்தின் பிற்கூற்றில், அவை உருமாறி, "Would” என்றும் “Should” என்றும் ஆகின. Would ஐயும் Should ஐயும் பார்த்தவர்கள், Cude என்பதிலும் "எல்" ("1") இருக்கவேண்டும் என்று தீர்மானித்து, அதனைக் "Could” என்று ஆக்கிவிட்டார்கள். இதுவும் ஒருவித ஒப்புமையாக்கம்தான்.

சிலசமயங்களில் ஒரு சொல்லின் எழுத்துக்கூட்டல் (Spelling) அதையொத்த ஒலியுடைய வேறுபல சொற்களின் எழுத்துக்கூட்டு முறையால் பாதிக்கப்பட்டு மாற்றியமைக்கப்பட்டுவிடுகிறது.

இன்று நாம் Delight என்று எழுத்துக்கூட்டுகின்ற சொல்லுக்கு இப்படியான ஒரு வரலாறு உண்டு. D–E–L–I–G–H–T என்று இன்று எழுத்துக்கூட்டப்படுகின்ற சொல், ஒரு பிரெஞ்சுச் சொல். அது பிரான்சிலிருந்து இங்கிலாந்துக்கு வந்தபோது, D–E–L–I–T என்றும், D–E–L–Y–T–Eஎன்றும் இரண்டுவிதமாக எழுதப்பட்டுவந்தது. அது பிரான்சிலிருந்து வந்து சேர்ந்தபோது, அதன் ஒலியை ஒத்த பல சொற்கள் இங்கிலாந்தில் அடிக்கடி பயன்படுகின்ற சொற்களாக இருந்தன.

*வளரும் . . . .*



மறைமலையடிகள்

## 4. பகுத்துணர்வும் மாதரும் . . .

ஆதலால், நமக்கு அருமையாய்க் கிடைத்த பகுத்துணர்ச்சியை நாம் பலவகையான உயர்ந்த வழிகளிலும் வளரச்செய்து அதனால் அழியாப் பெரும்பயனை அடைதல் வேண்டும். இதுவரையிலுமே, பகுத்துணர்ச்சியால் நாம் அடைந்த பயன்களும் அடைந்துவரும் பயன்களும் அளவிடப்படா. நாவுக்கு இனிமையான பண்டங்களை நாளுக்குநாட் புதிது புதிதாகச் செய்யக் கற்றுவருகின்றோம்; கண்ணுக்கு அழகான உடுப்புகளையும் நகைகளையும் வகை வகையாகச் செய்வித்து அணிந்து வருகின்றோம்; பார்க்கப் பார்க்கக் கவர்ச்சி தரும் ஓவியங்களை ( சித்திரப்படங்களை ) எழுதுவித்தும், பாவைகளைச் செய்வித்தும் அவற்றை நம்முடைய இல்லங்களில் வைத்துப் பார்த்துப்பார்த்து மகிழ்ந்து வருகின்றோம்; மேன்மாடங்களுள்ள மாளிகை வீடுகளையும், அவற்றைச் சூழப்பசிய தோட்டங்களையும் அமைப்பித்து அவ் வீடுகளிற் களிப்புடன் குடியிருந்தும் அத் தோட்டங்களில் மனக்கிளர்ச்சியோடு உலவியும் வருகின்றோம்; புல்லாங்குழல், யாழ், முழவு முதலான இசைக்கருவிகளின் இனிய ஒலிகளையும், அவற்றொடு சேர்ந்து பாடுவார்தம் இசைப்பாட்டுகளையுங் கேட்டுப் பெருங்களிப்பு அடைந்து வருகின்றோம்;

நறுமணங் கமழும் பலவகை மலர்களைச் சூடியும், அம் மலர்களிலிருந்துஞ், சந்தனக்கட்டை அகிற்கட்டை முதலியவற்றைலிருந்தும் பெற்ற நெய்யையுங் குழம்பையும் பூசியும் இன்புறுகின்றோம்; மிக மெல்லிய பஞ்சுகளாலும் பறவைகளின் தூவிகளாலும் அமைக்கப்பட்ட மெத்தைகளை வழுவழுப்பாகச் செய்வித்த தந்தக் கட்டில்களில் இடுவித்து, அவற்றின்மேற் படுத்து இனிது உறங்குகின்றோம். இன்னும், ஏவற்காரால் வீசப்படும் வெட்டிவேர் விசிறிகளாலுந், தாமே சுழலும் விசிறிப் பொறிகளாலும் வெயிற்கால வியர்பையினையும் புழுக்கத்தினையும் மாற்றி மகிழ்ச்சியடைகின்றோம்.

திறமைமிக்க புலவர்களால் எழுதப்படும் புதிய புதிய கதைகளைப் பயின்று உள்ளங்களிக்கின்றோம். இங்ஙனமாக, நமக்குள்ள பகுத்துணர்ச்சியின் உதவியைக்கொண்டு நாளுக்குநாள் நாம் அடைந்துவரும் இன்பங்களை முற்ற எடுத்து உரைக்கப் புகுந்தால் அவற்றிற்கு இவ் ஏடு இடங்கொள்ளாது.

மேலும், நமக்குள்ள பகுத்துணர்ச்சியின் மிகுதிக்குத் தக்கபடி நாம் மிகுந்த இன்பத்தை அடைந்துவருவதுடன், பகுத்துணர்ச்சியில் நம்மினும் எத்தனையோ மடங்கு உயர்ந்த அறிவுடையோர்களாற் புதிதுபுதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டு வரும் பொறிகளின் ( இயந்திரங்களின் ) உதவியால், நாம் எல்லையில்லாத இடர்கிடலின்றும் விடுவித்து எடுக்கப்பட்டு, ஒவ்வொரு நாளும் புது புது நலங்களை அடைந்து இனிதாக வாழ்நாளைக் கழித்து வருகின்றோம்.

நீராவிவண்டிக்கள் ஏற்படாத அறுபது எழுபது ஆண்டுகளுக்கு முந்தி நம் முன்னோர்கள் ஓர் ஊரிலிருந்து தொலைவிலுள்ள மற்றோர் ஊருக்குச் செல்லநேர்ந்தால் அப்போது அவர்கள் எவ்வளவு துன்பப்பட்டார்கள் ! அக்காலங்களிற் செவ்வையான பாட்டைகள் கிடையா. இருந்த சில பாட்டைகளோ கல்லும் கரடும் மேடும் பள்ளமும் நிரம்பிக், கால்நடையாய்ச் செல்வார்க்கும் மாட்டு வண்டிகளிற் செல்வார்க்கும் மிகுந்த வருத்தத்தையுங் காலக்கழிவினையும் பணச் செலவினையும் உண்டாக்கின.

அப் பாட்டைகள் காடுகளின் ஊடும், மலைகளின் மேலும், பாலங்கள் இல்லா ஆறுகளின் நடுவுங் கிடந்தமையால், அவற்றின் வழிச் செல்வோர்கள் புலி கரடி ஓநாய் பாம்பு முதலான கொடுவிலங்குகளாலுங் கள்வர்களாலும் அலைக்கப்பட்டுப் பொருளும் உயிரும் இழந்தும், பொருள் இழந்து அரிதாய் உயிர்தப்பியுந் துன்புற்றார்கள்; வழியிடையே உள்ள ஆறுகளில் வெள்ளங்கள் வந்துவிட்டால், ஓடம் விடுவார் இல்லாதபோது, அக் கரையில் வந்து சேர்ந்தார் அங்கேயும் இக்கரையிற் போய்ச் சேர்ந்தார் இங்கேயும் ஆக, வெள்ளம் வடியும் நாட்கள் வரையிற் கவலையோடு காத்திருந்தார்கள்.

*வளரும் . . . .*





The Maharajah of Pithapuram had intelligently anticipated the epoch - making Edict of the Travancore Prince, by throwing open his Estate temple to all the depressed classes.

It was an unforgettable picture of moving pathos that the Maharajah looked while addressing the pupils of the depressed classes of the Nandanar Kalvi Kazhagam at Chidambaram. As he went on speaking to a hushed up and respectful audience, his over - flowing sympathy almost reached a climax. Tears had welled up in his eyes and trickled down his cheeks, his throat began to dry and words became visibly overpowered by emotion.

It was all the moving picture of the milk of human kindness in flesh and blood. A thrill went through the audience and they were electrified with a healthy emotion. For such an unnatural human touch in an aristocrat that audience was least prepared. Yet they were bathed in sympathy and they breathed in the spirit of sincerity.

If in particular the depressed classes have a demand on his munificence, the destitutes and the poor are no less the recipients of his general attention. As a member of the Madras Legislature in 1930, the Maharajah of Pithapuram moved a resolution demanding the taking of a census of the beggars and the homeless in the province, which should be. the starting point of an attempt to solve the problem of poverty by the State. Yet the dread of finance damped the Ministry's enthusiasm and prevented them implementing this resolution. Though unfruitful, this is yet another evidence of his endless concern for the poor.

The Maharajah has a genius for friendship. He is the most loyal friend one can boast of among the unreliable aristocrats. At the sight of his close friends he waives all formalities and casts ceremonies to the winds and dives deep into an intimate chat. But the sight of a stranger as yet undiscovered acts on the Maharajah as the touch of a strange object acts on the snail. He breaks not the ice for a pretty long time and sparingly engages in the conversation. Slowly and searchingly he surveys your figure, fathoms your mind and feels your pulse. If you survived this subtle operation and came out unscathed, you are the lucky Cassim with the secret of " Open Sesame ". Once admitted, you are overpowered by his geniality and gentle love.

You are feasted with the proud consciousness of the possession of his confidence. He makes you forget by his mild bearing that he is a Maharajah. When you have done an appreciable thing which has gladdened his heart, he accosts you with emotion and addresses you in the most tender tones and even hugs and blesses you most affectionately.

Many may fancy that the Maharajah is an austere and morose figure cut in alabaster, who would persist in his gravest look. They were never more mistaken. The apparently calm surface of his austere countenance is often enough splashed by the gentle ripples of sweet smiles and swaying laughter. While in agreeable company none can be more genial than the Maharajah. He is as much alive to the serious aspect of a situation as to the lighter side of life.

He could be grave as a sage and gay as a child whenever he chooses. Even in his morose moods " nothing is so dainty sweet as his lovely melancholy ". His philosophy of life is a balanced one, the gaiety of the " La' Allegro " and the gloom of the " Ill Pensoroso " mixed up in due proportions. He uses to lapse into amazingly playful moods and assume amusingly child-like poses. And on such occasions it is Heaven itself to be his companion. Even the presence of strangers does not inhibit his knowing wink and a significant shrug that make you share his secret joy.

***To Continue....***

பேராசிரியர் சி.அ.சங்கரநாராயணன்

தலைசிறந்த மொழிபெயர்ப்பாளர் விருதாளர், தமிழ்நாடு அரசு


## அகநானூறு — 9

வினைமுற்றி மீண்ட தலைமகன் தேர்ப்பாகன் கேட்பச் சொல்லியது.

**பாலை** **கல்லாடனார்**

கொல் வினைப் பொலிந்த, கூர்ங் குறும் புழுகின்,
வில்லோர் தூணி வீங்கப் பெய்த
அப்பு நுனை ஏய்ப்ப அரும்பிய இருப்பை,
செப்பு அடர் அன்ன செங் குழை அகம்தோறு,
இழுதின் அன்ன தீம் புழல் துய்வாய்
உழுது காண் துளைய ஆகி, ஆர் கழல்பு,
ஆலி வானின் காலொடு பாறி,
துப்பின் அன்ன செங் கோட்டு இயவின்,
நெய்த்தோர் மீமிசை நிணத்தின் பரிக்கும்
அத்தம் நண்ணிய அம் குடிச் சீறூர்
கொடு நுண் ஓதி மகளிர் ஒக்கிய
தொடி மாண் உலக்கைத் தூண்டு உரல் பாணி,
நெடு மால் வரைய குடினையோடு இரட்டும்
குன்று பின் ஒழியப் போகி, உரம் துரந்து,
ஞாயிறு படினும், "ஊர் சேய்த்து" எனாது,
துனை பரி துரக்கும் துஞ்சாச் செலவின்
எம்மினும், விரைந்து வல் எய்தி, பல் மாண்
ஓங்கிய நல் இல் ஒரு சிறை நிலைஇ,
பாங்கர்ப் பல்லி படுதொறும் பரவி,
கன்று புகு மாலை நின்றோள் எய்தி,
கை கவியாச் சென்று, கண் புதையாக் குறுகி,
பிடிக் கை அன்ன பின்னகம் தீண்டி,
தொடிக் கை தைவரத் தோய்ந்தன்று கொல்லோ
நாணொடு மிடைந்த கற்பின், வாள் நுதல்,
அம் தீம் கிளவிக் குறுமகள்
மென் தோள் பெற நசைஇச் சென்ற என் நெஞ்சே?

## AGANANOORU— 9

He Speaks to His Charioteer

**PALAI** **Kalladanar**

*O, Charioteer, races my heart*
*to my beloved in her hamlet*
*out-speeding the Car.*
*Her abode is velvet soft*
*as mahua buds*
*as caps of arrow-heads*
*in a quiver. Flower stalks break*
*loose, fall as ruddy bloody meat*
*chops on the wood path*
*with fair hutments along.*
*Maids pound with pestle*
*glistening with metal rings*
*the mortars; sing;*
*sing pestle--mortar lays in mix*
*with owls' hoo-hoo-hoooo;*
*the clonk and the hoot in jigsaw*
*of beats! Hillocks sound at even*
*sundown Steeds gallop sagging*
*never for the hamlet far. My heart*
*ahead reached my she listening*
*to gekko's clicks, waits in faith*
*for advent augured. With my arms*
*close her eyes, comb her locks,*
*press her bangles in embrace tight*
*I shall, O, my heart you had flown*
*already unto her!*

***To Continue...***



# குழந்தைக் கம்பன்!

முனைவர் தேவி நாச்சியப்பன்

147

காப்பியக் கவிஞர் மீனவன் அவர்கள்
குழந்தைக் கவிஞரைப் பற்றி
15–06–2002–ல் எழுதிய கட்டுரை.

## குழந்தைக் கம்பன்

---



குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா நாடறிந்த மாபெரும் மனிதர். யாரும் தொட அஞ்சும் குழந்தை இலக்கிய உலகில் முடி சூடா மன்னர். எளிய கதருடைக்குள் காந்தியின் எளிமை காட்டும் இலக்கிய வடிவம். அன்பு கனிந்த ஆனால் ஆர்வம் மிக்க அளவான பேச்சு. புலவர்களும் நண்பர்களும் புடை சூழ அவர் அமர்ந்து உரையாடிய காட்சி இன்னும் என் மனக்கண்ணில் நிழற்படம் போல் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது.

குழந்தைக் கவிஞர் காரைக்குடி இந்தியன் வங்கி மேலாளராகப் பணியேற்றிருந்த நேரம். கடனைத் திருப்பிச் செலுத்தாத பயனீட்டாளர்களைத் தேடி, அவர் சென்று நிலுவைத் தொகையை உடன் கட்டி விடுமாறு சொல்லி வந்த நேரம். வண்டிக்குக் கடன் வாங்கிய நண்பர் ஒருவர், ஆயிரம் ரூபாய்களைத் தவணை முடிந்தும் செலுத்தாத நேரம். பிணையக் கையெழுத்துச் செய்த என்னைத் தேடிய போது, நான் புதுவயலில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். வங்கியில் இருந்த ஒருவர், என்னைக் கவிஞர் என்று சொல்லி, என் மனைவி காரைக்குடி மீ.சு. மேல்நிலைப் பள்ளியில் பணியாற்றி வருவதாகக் கூறியுள்ளார். என் மனைவியைச் சந்தித்த கவிஞர், செய்தியைக் கூறி, தன்னை வங்கிக்கு வந்து காணுமாறு சொல்லிச் சென்று விட்டார்.

நானும் வங்கியில் அவரைச் சென்று கண்டேன். என்னைக் கண்டதும் உடனே அவர் எழுந்து, "உங்களைப் பற்றி நான் இங்கு வந்த பின் நிறையக் கேள்விப்பட்டேன். மெத்தவும் மகிழ்ச்சி! பிணையாளராக உள்ள நீங்கள், கடனைச் செலுத்த உங்கள் நண்பருக்கு அறிவுறுத்துங்கள். நான் வங்கியைப் பொறுத்த செய்திகளில் கண்டிப்பானவன். வேண்டுமெனில் கால அவகாசம் தரலாம்." என்று கூறிவிட்டு, "இப்பொழுது நாம் கவிதை பற்றிய செய்திகளைப் பேசுவோம்." என்று சொல்லி, குளிர்பானம் கொண்டு வரச் செய்தார்.

அப்பொழுதுதான் பினாங்கில் நடந்த கம்பர் பிள்ளைத்தமிழ் போட்டியில் நான் முதல் பரிசும், காரைக்குடி மீ.சு. உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் அமரர் முத்து சம்பந்தன் அவர்கள் இரண்டாம் பரிசும் பெற்றிருந்த நேரம். அதனைக் கேட்ட அவர், " நான் இங்கு ஒரு குழந்தை எழுத்தாளர் சங்கத்தை விரைவில் தொடங்கலாம் என நினைத்துள்ளேன். அதனைத் தொடங்கி உங்கள் இருவருக்கும் பாராட்டு விழா நடத்த எண்ணுகிறேன்." என்று சொன்னதோடு உடனே அவ்விழாவை நடத்திக் காட்டினார்.

அதுதான் என் கவிதைப் பணிக்குக் காரைக்குடியில் நடந்த முதல் பாராட்டு விழா. அன்று தொடங்கிக் கவிதை உலகில் நான் பல பாராட்டு விழாக்களைக் கண்டு மகிழ்ந்து வருகிறேன். என்னை தமிழ் உலகுக்கு அறிமுகப்படுத்திய அந்த நல்ல உள்ளத்தை, குழந்தைக் கம்பனை இன்றும் நான் நினைந்து போற்றுகின்றேன்.

வங்கிக் கடனை வசூலித்தார்.
இலக்கியக் கடமையை நிறைவேற்றினார்.



# பதிகங்களைப் படியுங்கள்!

156

செவ்விசை மாமணி திருமதி சீதை மெய்கண்டான்

## பதினோராம் திருமுறை – 2

### காரைக்கால் அம்மையார் – 1



இவர் கி.பி. 4, 5ஆம் நூற்றாண்டுக் காலத்தில் வாழ்ந்த முதுபெரும் சிவனடியாராகக் கருதப்படுபவர். சிறு வயது முதலே சிவனிடம் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் வாழ்ந்தவர் என்பதை அவரின் பாடல் மூலம் தருகிறது. “பிறந்து மொழி பயின்று பின்னெல்லாம் காதல் சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன்” எனப் பாடியுள்ளார். இவரின் நினைவாக மாங்கனி விழா இன்றளவும் கொண்டாடப் படுகிறது. இறைவன் அருள் பெற்று அவரடியிலேயே உடல் உருகிய கோலத்தில் என்றும் இருக்கும் பேறு பெற்றவர். சைவப் பெண்களும், சைவ ஆண்களைப் போன்று கல்வி கற்றிருந்தனர் என்பதற்கு இவரின் மூத்தத் திருப்பதிகங்களும் திருஇரட்டை மணிமாலை மற்றும் அற்புதத் திருவந்தாதிகளுமே சான்றாக விளங்குகின்றன. காரைக்கால் அம்மையார் பாடல்களில் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் இருத்தலும் சோழர் காலத்து மாளிகை மடத்து ஆசாரியரிடம் மாணவி ஒருத்தி சமயக் கல்வி பயின்றனள் என்பதும் பெண்களும் சமய சாத்திரப் பயிற்சி உடையவராக இருந்தனர் என்பதை உணர்த்துகின்றன. பக்தி கைகூட வேண்டுமானால் பரம்பொருள் ஓர் உருவநிலையில் காட்சி தந்து மனதில் அமர வேண்டும். நம் மனம், கண்–காது கொண்ட உருவு கொண்ட பொருள் கண்டே வளம் பெறும் தன்மையது. “அகலமாய் யாரும் அறிவரிதப் பொருள் சகலமாய் வந்தது என்று உந்தீ பற” எனச் சாத்திரம் கூறுகிறது. “பத்தராயினார் அத்தர் அன்னியூர் சித்தர் தாள் தொழ முத்தராவரே” என்பது அவர் வாக்கு. சிலப்பதிகாரம், மணிமேகலை, மதுரைக்காஞ்சி போன்ற நூல்களில் கோவில்களின் வரிசையைக் குறிக்கும் இடங்களில் எல்லாம் சிவனின் திருக்கோயில் முதன்மை பெற்றுள்ளதாகக் காணப்படுகிறது.

“பிறவா யாக்கைப் பெரியோன் கோவிலும், நுதல் வழிநாட்டத்து இறையோன் கோவிலும், மழுவாள் நெடியோன் தலைவனாக” என்றும் இந் நூல்கள் காரைக்கால் அம்மையார் காலத்திற்கு முன்பிருந்தே வழங்கி இருப்பதை இலக்கியங்கள் காட்டுகின்றன. கயிலையில் சிவபெருமான் திருவருளைப் பெற்ற அம்மையார் ‘‘கூடு மாறு அருள் கொடுத்துக் குலவு தென் திசையில் என்றும் நீடு வாழ் பழன மூதூர் நிலவிய ஆலங்காட்டில், ஆடும் மா நடமும் நீ கண்டு ஆனந்தம் சேர்த்து எப்போதும் பாடுவாய் நம்மை” என்று சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளிய உரையை உட்கொண்டு திருவாலங்காட்டை அடைந்து பாடிய இரு பதிகங்களும் அடியார்களுள் காலத்தால் முற்பட்ட அம்மையார் திருவாக்கு ஆதலின் மூத்த திருப்பதிகங்கள் என்ற பெயரில் வழங்குகின்றன. இப்பதிகங்கள் இரண்டும் 22 திருப்பாடல்களை உடையன. வாகை மரம், மூங்கில், முள்ளி மரமும், வற்றிய கள்ளியும், விள மரங்களும் சரிந்துள்ளதானாலும், ஆலமரம் அதிகம் இருந்ததால் திருஆலங்காடு என அழைக்கப்பட்டிருக்கலாம். எட்டி, இலவம், இண்டைக்கொடி, சூரை, காரை போன்றவையும் அங்கு மிகுதியாகக் காணப்படுவதை காரைக்கால் அம்மையார் குறித்துள்ளார்.

“வாகை விரிந்து வெண்ணெற்றொளிப்ப
மயங்கு இருள் கூர்நடுநாளை ஆங்கே
கூகையோடு ஆண்டலை பாட ஆந்தை
கோடதன் மேற் குதித்தோட வீசி
ஈகை படர் தொடர் கள்ளி நீழல்
ஈமம் இடுசுடு காட்டு அகத்தே
ஆகங் குளிர்ந்ததனால் ஆடும் எங்கள்
அப்பனிடம் திருஆலங்காடே!

திருவாலங்காடு, இறந்தவர் புதைப்பதும் எதிர்ப்பதும் சேர்ந்து நடக்கும் இடம். அவ்விடம், புவியிலிருந்து புலன் பொறிகள் செல்லுமிடமெல்லாம் சென்று தவித்து மகிழ்ந்து இருந்து உறங்கிச் சினந்து மயங்கி என இவ்வுடலைக் கொண்டு ஊசலாடிய உடல் குளிர்ந்த பின் சேரும் இடம். குளிர்ந்த உடலின் மேல் அனல் போட்டு எரியூட்டும் தணல்மேல் நின்றாடும் இறைவன் உயிரினை உள்வாங்கித் தன் அகத்தில் சேர்த்துக் கூத்தாடுவான். அவ்வமயம், மரங்கள் கிளைகள் எல்லாம் தோகை விரித்துக் காற்றில் கூத்தாடும். ஆந்தை கூகை அலறும்; அவை சிறகை விரித்து கள்ளிச்செடியும் காட்டிக் கொடியும் வளர்ந்து கொடிய இடமாய் இருந்தாலும் நிழலிட்டுக் குரல் எழுப்பும். இறைவன் அங்குக் கூத்தாடி உனை அழைத்து ஆனந்தக் கூத்தாடும் அப்பனாய் இருந்து அருள் பாலிக்கிறான் என்கிறார்.

*வளரும் . . . . .*



# ஆய்த எழுத்து !

பெரும் பேராசிரியர் செ.இரா.செல்வகுமார்

கனடா

107

ஆய்த எழுத்து ஒரு தனிச்சிறப்பான எழுத்து ழகரம் போல் சிறப்பெழுத்து என்று சொல்லவேண்டும்.

**இது மொழி முதலில் வராது, கடைசியாகவும் வராது.** குறிலை அடுத்து வல்லின எழுத்துக்கு முன்பு வந்து **வல்லின எழுத்தின் ஒலியை நுணுக்கமாக வேறுபடுத்தும்.** எ.கா அஃது, எஃகு, கஃசு (காற்பலம் என்று பொருள்), பஃறி (படகு என்று பொருள்), திருக்குறளில் வெஃகாமை என்றே ஒரு அதிகாரம் உண்டு. சரி ஒலிப்புக்கு வருவோம்..

தமிழில் ஒவ்வொரு வல்லின ஒலியும் குறைந்தது நான்கு விதமான ஒலிவேறுபாடுகளை இடம் சார்ந்து எழுத்துச்சூழலுக்கு ஏற்ப, ஆனால் மிகவும் சீரொழுக்கத்துடன் ஒலிக்கும். இதனாலேயே தமிழின் ஒலிப்பு விதிகள் மிக நுண்ணியமானவை.

**இதன் ஒலிப்பு ஹ் அன்று !**

தமிழில் க, ச, ட, த, ப, ற ஆகிய ஆறும் வல்லின எழுத்துகள். இவற்றுள் க,ச, த, ப ஆகிய நான்குதான் மொழிமுதலாக (ஒரு சொல்லுக்கு முதல் எழுத்தாக) வரமுடியும் (தமிழில்).

வல்லின எழுத்துகள் **இரண்டே இரண்டு இடங்களில்தான்** வலித்து ஒலிக்கும். மற்ற இடங்களில் இடம்சார்ந்து கூடுதலாக மூன்று விதமாக ஒலிக்கும். ஆக மொத்தம் நான்கு விதமாக ஒலிக்கும்.

வலித்து ஒலிக்கும் இடங்கள்"

1) மொழி முதலாக வந்தால்

2) முன்னே வரக்கூடிய வல்லின புள்ளி வைத்த எழுத்து வந்தால்

இப்பொழுது **க** என்னும் எழுத்தை எழுத்தை எடுத்துக்கொள்வோம்.

1) **க**ட்டி என்னும் பொழுது க வலித்து ஒலிக்கும் (சொல்லின் முதல் எழுத்து)

2) பக்**க**ம் என்னும்பொழுது க என்னும் எழுத்துக்கு முன்னே க் வந்திருப்பதைப் பாருங்கள். எனவே வலித்து ஒலிக்கும்.

3) பங்**க**ம் என்னும் பொழுது க என்னும் எழுத்துக்கு முன்னே வல்லின எழுத்து இல்லை, ஆனால் மெல்லின மெய் எழுத்து உள்ளது. எனவே க என்பதை ஒலிக்கும்பொழுது சற்றே மூக்கொலி கலந்து மெலிந்து ஒலிக்கும்

4) பகல் . இச்சொல்லில் க என்னும் எழுத்துக்கு முன்னே வல்லின புள்ளி வைத்த எழுத்தும் இல்லை, மெல்லின புள்ளி வைத்த எழுத்தும் இல்லை. ஆகவே இது மூக்கொலி இல்லாமல் மெலிந்து ஒலிக்கும். இவ்வொலி g என்பது போல இருக்கும். சிறிதே காற்றொலி கலந்தும் சில நேரம் ஒலிக்கலாம் (வட்டார வழக்கு). **ஆனால் வலித்து ஒலிக்காது. மூக்கொலியுடனும் ஒலிக்காது.**

5) அஃகம் (சுருங்குதல் என்று பொருள்) என்பதில் க என்னும் எழுத்துக்கு முன் ஆய்த எழுத்தாகிய **ஃ** வந்துள்ளது. இப்படி வந்தால், க என்றொலிக்க அடிநாக்கு எப்படி பின்புற அண்ணத்தில் ஒட்டி ஒலி எழுப்புமோ அதே இடத்தில் அதே போன்ற இயக்கத்தில், முற்றிலும் ஒட்டாமல் சற்றே காற்று புகுமாறு ஒலிக்க வேண்டும். அதாவது axam என்பது போல ஒலிக்கும். இங்கே கருத்தில் கொள்ள வேண்டியது க், ங் ஆகிய இரண்டையும் ஒலிக்க நாக்கும் அண்ணமும் எப்படித் தொழிற்படுமோ (இயங்குமோ) அதே போல இயக்கம் ஆனால் சிறிது காற்று போகும்படி ஒலிப்பது. இது ஹ அன்று. ஹ என்றொலிக்க தொண்டையின் கீழே இருந்து ஒலிக்க வேண்டும். xa எனக்குறித்தல் பொருந்தும்.

கஃ**சு** என்பதை எப்படி ஒலிக்க வேண்டுமென்றால். (ச்)சு என்பதை ஒலிக்க எப்படி நடுநா, நடு அண்ணத்தைத் தொட்டு ஒலி எழுப்புமோ அல்லது ஞ் என்று சொல்ல நடுநா எப்படி நடு அண்ணத்தைத் தொட்டு மூக்கொலியுடன் ஒலி எழுப்புமோ, அதே இடத்தில் அதே மாதிரி, ஆனால் சற்றே இடைவெளி விட்டு காற்று புகுமாறு சொல்லுதல். ஆகவே ka'su என்பது போல ஒலிக்கும்.

முள் தீது என்பதைத் தமிழில் **முஃடீது** என்று புணர்த்தி எழுதலாம். இங்கே, டீ என்பதற்கு முன்னே ஆய்த எழுத்து வருகின்றது. டீ என்றொலிக்க நாம் எப்படி நாக்கை வளைத்து நாக்கின் நுனியை நடு அண்ணத்தில் ஒட்டி ஒலி எழுப்புவோமோ அதே போல இயக்கத்தால், முற்றிலும் ஒட்டாமல் சற்றே காற்று புகுமாறு ஒலிஎழுப்பினால் எப்படி ஒலிக்குமோ அப்படி ஒலிக்கும். மு'டீது (mu'deetu) என்றொலிக்கும். அதிக அழுத்தம் இல்லாமல் சற்று காற்றுபுகுந்து மழுப்புமாறு டீ என்பதைச் சொல்ல வேண்டும். இதேபோலவே **அஃது.** து என அழுத்தியோ மெலிந்தோ ஒலிக்காமல் சற்றே அரைகுறையாகக் காற்று புகுமாறு சொல்லுதல். **அது** என்று சொல்லுங்கள். ஆனால் து என்பதை அதிகம் நாக்கு பல்லின் பின்புறத்தை அழுத்தி ஒலிக்காமல் சொல்லுங்கள்.

இதேபோலவே அஃபல் (இப்படி ஒரு சொல் இல்லை), என்பதை ஒலிக்கும்பொழுது, ப என்றொலிக்க எப்படி இரண்டு இதழ்களையும் ஒட்டி ஒலிப்போமோ அல்லது ம என்றொலிக்க எப்படி இரண்டு இதழ்களையும் ஒட்டி ஆனால் மூக்கொலி வரும்படி ஒலிப்போமோ அப்படி **இரண்டு இதழ்களையும் முற்றிலுமாக ஒட்டாமல்** சற்று இடைவெளி விட்டு காற்று செல்லுமாறு ஒலித்தல் ஃப என்பதன் ஒலிப்பு. pha என்று குறிக்கலாம், ஆனால் துல்லியமற்றது.

கடைசியாக **பஃறி** (படகு) என்பதை **பறி** என்பதுபோல ஒலியுங்கள், ஆனல் றி என்பதை அழுத்தாமல் சற்றே காற்று வெளிப்படுமாறு ஒலிக்கவேண்டும். றி என்று சொல்லும்முன் சற்று நிறுத்திச் சொல்லலாம்.

இவ்வொலிகள் மிகவும் நுண்ணியவை. எஃகு அஃகு முதலானவை எளிதாக ஒலிக்கலாம். மற்றவை அவ்வளவு எளிதாகவோ துல்லியமாகவோ ஒலிக்க வருவது கடினம். ஆய்தம் இல்லாவிட்டால் எப்படி ஒலிப்பீர்களோ அப்படியே ஒலியுங்கள், ஆனால் சற்றே இடைவெளி விட்டும் அதிகம் அழுத்தம் தராமலும் ஒலியுங்கள். அவை சரியான ஒலிப்பு.

ஆய்தம் என்பது சார்பெழுத்து. அடுத்துவரும் வல்லின எழுத்தைப் பொருத்து ஆய்தம் அவ்வெழுத்தில் மாற்றம் உண்டாக்கும். நுண்ணிதாக சிறிது காற்றொலியுடன் மெலிதாக்கும். புள்ளிவைத்த ங், ஞ், ண், ந், ம், ன் ஆகிய மெல்லின எழுத்துகள் மூக்கொலியுடன் அடுத்து வரும் வல்லினத்தை மெலிதாக்கும்.



# வள்ளுவம்

14

## மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார்

ஒத்தமுகம் இருவர்பாற் காண்கை அரிதாதல்போல, முற்றும் ஒத்த வாழ்க்கைநிலை பெற்றார் இருவரைக் காண்கையும் அரிதாம். மேலும், ஒருவர் முகந்தானும் காலக்கோட்பட்டும் நோய்முதற் பிற அல்லல்வாய்ப்பட்டும். மறைவாகவோ புலனாகவோ, மாற்றம் உற்றுச் செல்வது பொதுக்காட்சி. நம்மிடைப்பட்ட நிலைவேற்றுமைக் கெல்லாம் இயற்கைக் காரணம். ஒருவர்க்குக் கருத்தொடங்கி அமைந்த சூழ்நிலை, மனம், அறிவு. செயல் அனையன இந்நனந் தலை யுலகத்து மற்றொருவர்க்கு முற்றும் ஒத்து அமைவதில்லை.



அமையாமை குற்றமோ எனின், அன்று: அஃது யாரொருவராலும் காத்துக்கொள்ள வாராப் பிறப்பு அனைய உலகியல்பு என்க.

மர முதலாய பிறவிகளிலும் நிலை யொப்பின்மை அறிவார். கற்புடைத் தாய்வயிற்று இரட்டைகள் பாலும் வேற்றுமை காண்பார். மனவறிவுப் பிறப்புடைய கோடா கோடி மக்கள்பால் நிலைப் பன்மை யிருப்பதைக் கண்டு, இஃதோர் ஒழுங்கின்மை என்று மயங்கார். மக்கள் நாம் வார்க்கும் அச்சுருவமோ, நினைமின் ! உலகம் ஒழுங்குட்பட்ட வேற்றுமையுடையது. அவ்வேற்றுமை யாற்றல்களால் உலகம் வளர்வது. நம் உடற் சிறுவுலகமும் கலப்புணவால் உரம் பெறக் காணுதும் அன்றோ ! பிறப்பிற்கு ஒவ்வா, மன்பதை நலத்திற்கு ஒட்டாப் பொய்ம்மிடை வஞ்சகநிலை கண்டு. சான்றோர் வெய்து துடிப்பரே யல்லது. தூய நெஞ்சில் தோன்றிய மக்களின் தனித்தனிப் போக்குக் கண்டு கசவார்; வையங் கெடுமென மயங்கார்.

உள்ளத் தனி வளர்ச்சியே உலகப் பொது வளர்ச்சி என்ற உண்மை கண்டவர், யாரொருவர் மனவறிவுப் பெருக்கத்தையும் இடையூ றெனத் தூற்றார்காண்.

மக்கள் வாழ்வு வெள்ளத்தின் ஓட்டம்போல. நிலை பலவாய்ச் செல்லும் அரிய எளிய உலகியல்புகளை உட்கொண்ட பெருமகனார் திருவள்ளுவர். நட்பு. நட்பாராய்தல், பழைமை, தீநட்பு. கூடாநட்பு. பேதைமை புல்லறிவாண்மை. இகல் என்றினைய அதிகாரத் தலைப்புக்களை ஒருவர் நோக்காது பார்த்த அளவிலேயே. நாம் பழகும் மக்களினம் ஒருநிலைப்பட்டதன்று: நிலைவேறு மிகுந்தகுழு என்பது புலனாம். வலியறிதல்.

காலமறிதல், இடனறிதல், தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல், வினைசெயல் வகை, குறிப்பறிதல். அவையறிதல், அமைச்சு, தூது என்ற தலைப்புக்கள் தம்மளவிற் காட்டுவது யாது ? ஓரினப் பிறவியாகிய நாம் வலியானும், காலத்தானும், இடத்தானும். இனத்தானும், தொழிலானும், இவற்றைப் பயன் கொள்ளும் வழியானும் சாலப் பிரிவுடையோம் என்பது. ஈண்டு எண்ணிய தலைப்புக்களும் நல்குரவு. இரவு, ஈகை, இரவச்சம், கண்ணோட்டம், இடுக்க ணழியாமை, மருந்து. ஊழ் என வரூஉம் இன்ன பல தலைப்புக்களும் திருக்குறள் கற்பார்க்குப் பறைசாற்றும் ஓரடிப்படை என்கொல் ? மக்கட் சாதி பல்வேறு நிலையிற்று: ஒருவனும் பல்வேறு நிலையினன்: அகதாவது மனம் அறிவு பொருள் சூழ்நிலை காலத்துக்குத்தக, வந்த வினைக்குத்தக. பழகும் ஆளுக்குத்தக, நல்ல தீய, இனிய வின்னா, தெளிந்த மயங்கிய, மெல்லிய வலிய பல நிலைகளை வெவ்வேறு அளவுகளில் உடையவன் என்பது. இம்மாறா வியல்பை மனத்துட் பதித்துக் கொண்டு, நிலைப்பன்மைக் கேற்ப அறப்பன்மை கரைந்த செந்நாவினர் வள்ளுவக்குரிசில் என்ற குறள் அடிப்படையை நாம் நன்கு தெளிவோமாக.

*பல நிலையறம் ' என்ற இத்தலைப்பு புதியதாயினும் ஆழ்ந்து விளங்குவதற்கு உரியதாயினும், வாய்வழி உணவு போலவும் மூக்குவழி உயிர்ப்புப் போலவும் திருக்குறட் கல்விக்கு இன்றியமையா நேர்வழியாகும். இவ்வழி கற்பினல்லது. வள்ளுவர் நெஞ்சம் காண்டலும் இன்று: நாம் சாலப் பயன் உறுதலும் இன்று.

பொதுமறை என்னும் கருத்தழுத்தம் படிந்து பலர் திருக்குறளைக் கற்கின்றனர். பொதுமறை பொதுமறை என்றே யாரும் இந்நூலைப் பறை சாற்றுப.

ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்
அன்றென்ப ஆறு சமயத்தார் —நன்றென
எப்பா லவரும் இயைபவே வள்ளுவனார் முப்பால் மொழிந்த மொழி என வள்ளுவர் சமயப் பொதுமை பரப்பப்படுகின்றது. "அதற்கு உரியார் அந்தணரே யாராயின் ஏனை இதற்கு உரியார் அல்லாதார் இல் " என அவர் சாதிப் பொதுமை அறையப்படுகின்றது.

வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன்கு உணர்ந்தோர்கள் உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்துக்கு ஒருநீதி என அவர் அறப்பொதுமை விளம்பப்படுகின்றது. "என்றும் புலராது யாணர் நாள் செல்லுகினும் நின்றலர்ந்து தேன்பிலிற்றும் " என அவர் காலப்பொதுமை வியக்கப்படுகின்றது. " வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து " என அவர் இடப்பொதுமை கிளக்கப்படு கின்றது. ஆம். இப்பொதுமைப் புகழ்ச்சிக்கு எல்லாம் திருவள்ளுவர் ' ஆன்ற தகையினர் என்பதனை மறுப்பவரும் உண்டுகொல்! ஒருசாதி. ஒருமதம். ஒருநாடு என்றினைய செயற்கைநிலை கடந்தது

*வளரும் . . . . .*



# தமிழன்னை நான்மணிமாலை


செம்மொழிக்கவிஞர் மெய்ஞானி பிரபாகரபாபு

சங்க இலக்கிய ஆய்வறிஞர்


49

அறனழீஇ அல்லவை செய்தலின் தீதே
புறனழீஇப் பொய்த்து நகை.

அறநெறிக்குப் புறம்பானதை ஒருவன் செய்வதை விடவும் தீமையானது, பிறரைப் புறம்பேசிப் பழித்துவிட்டு நேரில் பொய்யாக நகைப்பது என்பதை அறி! மனிதன் தன் குணத்தைச் செதுக்கிக் கொள்ளவே திருவள்ளுவரால் தரப்பட்ட சிறந்த உளிகளிலே ஒன்று புறங்கூறாமை நெறி! தன்மீதுள்ள பழிகளை எண்ணாமல் பிறர்மீது பழி கூறுவது தீதே! அதில் நன்மை என்றும் விளையாதே! கண்களின் முன்னே நின்று கடிந்தாலும் மறைவில் நின்று புறம்பேசக் கூடாது என்பது வள்ளுவர் வாக்கு! அன்னையின் அருளால் அவ்வாறே அமைந்தது எனது வாழ்வின் போக்கு! 'அறங்கள் பேணி உயிர் தரிப்பாய்! அறங்கள் தவறினால் உடன் மரிப்பாய்!' எனும் கொள்கையை வள்ளுவர் வழி உணர்த்தினாள் தமிழன்னை! அவ்வாறே வனைந்து கொண்டேன் என்னை! நன்னெறிகளால் என்னை வடிவமைத்த அன்னைக்கு நாளும் தொடுக்கிறேன் நான்மணிமாலை ! நற்றமிழே எனக்கு நலம்தரும் சோலை !

## அகவல்

திருமுகம் காட்டித் திகழொளி தந்தே
இருளினை நீக்கி இயங்கிட வைத்தாள்
நற்றிணை என்னும் நறுஞ்சுவை இலக்கியம்
கற்றிட வைத்தாள் கவலையும் தீர்த்தாள்

எட்டுத் தொகையில் எழிலார் வண்ணக்
கட்டுப் பூவாய்க் கமழும் நற்றிணை
அடிகள் ஒன்பதின் அளவில் தொடங்கி
அடிகள் பன்னிரண் டெனவே அமைந்த

பாடல் அனைத்தும் பசிய கரும்பாம்
நாடிப் படித்து நலமே கண்டேன்
பண்டைத் தமிழர் பண்பா டுரைக்கக்
கண்டே மகிழ்ந்தேன் கனிந்தேன் யானும்

மருதம் குறிஞ்சி மணக்கும் முல்லை
அருமை நெய்தல் அவிக்கும் பாலை
ஐந்திணைப் பிரிவில் அழகுற மிளிரும்
பைந்தமிழ் மாந்தர் பழகிய வாழ்வு

அகத்தின் உணர்வுகள் அனைத்திலும் ஒளிரும்
தகைமை யாவும் தமிழர் சிறப்பாம்
இணக்க உறவை இயம்பும்
கணக்கிலா இன்பம் காண்டல் சுவையே !

## 53

## வெண்பா

சுவையிற் சிறந்தநற் சொற்கள் புனைந்தும்
அவையில் உரைத்தும் அலர்ந்தேன் – எவையும்
தெளிந்தே பயின்றேன் திறமுடன் அன்னை
எளிதே கொடுத்தாள் எனக்கு.

## கலித்துறை

எனக்கே அளித்தாள் இலக்கியக் கொடையே என்றிருக்க
மனக்கா வினிலே மணக்கும் செந்தமிழ் மலிந்திருக்க
நினைக்கும் வினைகள் நிகழச் செய்திடும் நிலையடைந்தேன்
அனைத்தும் இயற்றும் அறிவும் கூட்டினள் அருள்பொழிந்தே!

## விருத்தம்

அருளும் பொழிந்த அன்னை எந்தன்
அழுக்கு நீக்கி அறம்நிறைக்க
இருளும் களைந்தே இமைகள் திறந்தே
இகலும் களைந்தே இடர்கடந்தே

பொருளும் நிறைத்தேன் புகழும் வளர்த்தேன்
போக்கும் சிறந்து பொலிந்ததுவே
மருளும் விலக்கி மனத்தைத் துலக்கி
மதிப்பும் கொடுத்தாள் மகிழ்வுறவே!



# பொருளைத் திறம்படச்செய்க!

புலவர் தி.வே. விஜயலட்சுமி, எம்.ஏ., எம்.ஃபில்.,

36

பெரும்செல்வம் பெறும் வகைகள் அறிவால், குணத்தால் தகுதியால் தான் ஒருவர் மதிக்கப்படுகிறார். இந்த மூன்றும் இல்லாது போனாலும் பொருள் இருக்குமானல் அவரை உலகம் மதிக்கும்படியாகச் செய்கிறது.

"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள்" (கு751)

அறிவும், குணமும், தகுதியும் பெற்றிருந்தும் பொருளைப் பெறாது போனால், அவரை இந்த உலகத்தவர் இகழ்வர். ஆனால் செல்வம்மட்டுமே பெற்றவரை எல்லாரும் சிறப்புச்செய்வார்கள். பொருள் மாத்திரம் இருந்தால் உடையான் என்ற பெயர் பெற்று விடுகிறாள். பொருள் இல்லாதான் இல்லார் என்ற பெயரைப் பெறுகிறான். பொருளுடையான் அடையும் சிறப்பிற்கு இதனினும் சான்றுண்டோ?

"இல்லாரை எல்லாரும் எள்ளுவர், செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு" (கு 752)

பொருள் என்ற அழியா விளக்கானது நினைக்கின்ற தேசத்திற்கெல்லாம் போகும்போது நம் நாட்டின் சிறப்பையும், பொருளுடையவனையும் விளங்கச் செய்யும். பொருள் உண்டான தேசத்தையும், அதை உடையானை விளங்கவும் செய்தலால் பொருளை விளக்கம் என்றார் வள்ளுவர். விளக்கில்லாத போது பொருள் மறைந்து விடுதல் போல பொருள் சென்ற இடத்தில் அழியாப் புகழை உண்டாக்கி விடுவதால் பொய்யா விளக்கம் என்றார் பொய்யில் புலவர்.

பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று (கு 753)

அருளுணர்வுக்கும் அன்புநிலைக்கும் பொருந்தாத வழியில் பொருளை ஈட்டும் வழிமுறைகளை விட்டுவிடுதல் சான்டே-றார் இயல்பு. மக்களைத் துன்புறுத்திக் கொடுமை செய்து பொருளைப்பெற்றால் மக்கள் வெறுப்பர். பொருளாற் பெற்ற பயன் மக்களுக்குப் பயன் செய்யவே. இன்றேல் பொருள் பெற்றும் பயனில்லை.

'செல்வத்துப் பயனே ஈதல்' என்பர் ஆன்றோர். நாடாள்வான் வருவாய் நாடாளும் உரிமையில் வரும் பொருள், ஏற்றுமதி, இறக்குமதி வணிகத்தால் வரும் பொருள், பகைவரை வெற்றி கொள்வதால் வரும் திறைப்பொருள் ஆகிய மூன்றும் ஆட்சியாளர்கள் பெறும் பொருள். இவையே நாடாள்வார் வருவாயாக உள்ள பொருள் என்று இலக்கணம் வகுக்கின்றார் தெய்வப்புலவர். (குறள்: 756)

குழந்தை வளர்ச்சியும், அன்பும் அருளும் குழந்தை நன்றாக வளர தாயின் அரவணைப்பும் கவனமும் மிக வேண்டும். அன்பும், அதன் முதிர்ச்சியால் உண்டாகும் அருளும் வளர செல்வமாகிய தாய், "செவிலித்தாய்" வேண்டும். அன்பு என்பது தாய், அருள் என்பது சேய். அன்பு என்னும் தாய் பெற்ற அருள் என்னும் குழந்தை, செ-சல்வம் என்னும் வளர்ப்புத் தாயால் வளர்க்கப்படுகிறது. அன்பும், அருளும் சிறக்க செல்வம் இன்றியமையாதது என்கிறது வள்ளுவம்.

அருள் என்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு (குறள்:757)
என்பது குறள்.

பொருள்தனைப் போற்றி வாழ் பொன்னும், பொருளும் உலகில் அழியும் தன்மை பெற்றவைகளே. ஆயினும் வறுமையின்றி வையத்தில் வாழ்வாங்கு வாழ சீரும் சிறப்பும் சூழ, ஓரளவு பொருள் தேவை என்பதை மறுக்க முடியாது.

*வளரும் . . . .*



# A CASE OF VARICELLA MYOCARDITIS WITH C C F WITH POST INFECTIOUS GLOMERULONEPHRITIS!

91

மருத்துவமாமணி தாரா நடராசன்

A six-year old boy was admitted to the hospital for the following complaints:

(1) Puffiness of face more in the early morning 14 days.

(2) Generalised swelling all over the body and progressive abdominal distention - 7 days.

(3) Fever - 7 days.

(4) Scanty high coloured urine - 2 days.

(5) Generalised papulo-vesicular lesions with itching 2 days.

(6) Difficulty in breathing even at rest and aggravation on lying down 1 day.

To begin with, the child had low grade intermittent fever for one week in 2ssociation with multiple infected ulcers over the scalp. This was followed by puffiness of the face, more marked in the morning hours and swelling in the upper half of the neck in the region of parotid and submandibular salivary glands. Subsequently, the edema became generalised, involving the abdomen and both feet. Only at this stage, the mother noticed that the child was passing reduced amount of con - centrated urine mixed with blood visible to naked eye. The patient became febrile again, accompanied by multiple papulo-vesicular lesions with pruritus, which appeared over the trunk first, later spreading to the face and scalp but. spared the distal parts of the extremities. One day before admission, the child became acutely breathless even at rest, and was orthopnocic. At this stage he was taken to a private doctor who referred the case to our hospital.

At the time of admission, the patient's general condition was moribund, He was acutely ill with dyspnoea and tachypnoea, orthopnoea with cold and clammy extremities, thready pusle, a tinge of cyanosis and clouding of consciousness. along with anasarca.

His blood pressure was not recordable. He had raised JVP, tender enlarged liver, bilateral basal rales and persistent tachycardia and gallop disproportionate to the fever.

There were generalised papulo-vesicular lesions more over the trunk-in different stages of evolution.

With all the above features a provisional diagnosis of varicella myocarditis with C.C.F. and post infectious glomerulonephritis was made.

Investigations like E.C.G. and enzyme studies were done. E.C.G. findings were consistent with the diagnosis of myocarditis. Enzymes were within normal limits. Serum amylase was slightly raised and renal function tests revealep an increase in blood urea and creatinine and 24-hour urinary protein estimation revealed moderate proteinuria. Serum complement levels were low. ASO titre was 330 Todd units. E.S.R. was high. Serum electrolytes, hemogram and urinalysis were done. When renal function returned to normal, IVP was done which showed normal excretion.

The boy was kept under strict bedrest, anti- failure measures and steroids. Unfortunately. on the second day of steroid therapy, the patient developed hematemesis and steroids had to be withdrawn.

With the above treatment hematuria and edema cleared within a week. The child was presented in the clinical meeting because of the rare clinical combination of postinfectious glomerulonephritis and varicella myocarditis. Patients with chickenpox may develop severe thrombo cytopenia with a tendency to bleed when put on immuno- suppressants such as steroids, a situation encoun- tered in our patient. Myocarditis due to chickenpox is rare, even though CNS complica- tions such as acute cerebellar ataxia, acute encephalomyelitis, polyneuritis, optic neuritis and Reye's syndrome have been described in children and primary varicella pneumonia in adults. Nephritis and nephrosis can occur following chickenpox, measles or mumps but rare. In a study of mumps in adults abnormal renal function was observed in every patient at sometime during the natural course of the disease and viruria was present in 75%. The frequency of renal involvement in children is unknown. Fataln ephiritis occurring 10-14 days after parotitis has been reported.





திரு. இரா. குமரவேலன்



## CHAPTER 2

### BHARATAN AS A DUTIFUL SON AND AN AFFECTIONATE BROTHER.



There are two aspects in the character of Bharata which Come foremost for study. As son he was respectful and dutiful and as a brother he was loving and loyal. Bie affection towards Lakshmana and Satruguna was also appreciable.

Dasarata succeeded his illustrious ancestors and subdued his foes. For a pretty long time he ruled over the country justly in the same manner as his forefathers did for several centuries. Though gifted with all glory and prosperity, the desire, to have a son to succeed him in his long and illustrious line, was very strong. Naturally he gave vent to this feeling to the sage and his guru Vasishta.

எங்குலத் தலைவர்கள் இரவி தன்னினும்
தங்குலம் விளங்குறத் தாணி தாங்கினார்.
மங்குநர் இல்லென வரம்பில் வையகம்
இங்குன தருளினால் இனிதின் ஓம்பினேன்
அறுபதினாயிரம் ஆண்டும் மாண்டுற உறுபகை

ஒடுக்கி இவ் வுலகை ஓம்பினேன் சிறிதொரு
குறையிலை என் பின்வையகம் மறுகுறும்
என்பதோர மறுக்கம் உண்டரோ – அருந்தவ
முனி வரும் அந்தணாளுரும் வருந்துதலின்றியே
வாழ்வின் வைகினர் இருந்துயர் உழக்குவர் என்பின்
என்பதோர் அருந்துயர் வருத்து மென் அகத்தை என்றனன்

Vasishta consoled Dasarata that if he were to perform Putrakamashti Yaga he would be gifted with sons of extra - ordinary ability, who would save the world as there was a divination that Lord Vishnu would incarnate to put an end to the atrocities committed by the Rakshasas :

ஈது முன் நிகழ்ந்த வண்ணம் எனமுளி
இதயத் தெண்ணி மாதிரம் பொருத நின்தோள்
மன்னநீ வருந்தல், ஏழேழ் பூதலம் முழுவதும் தாங்கும்
புதல்வரை அளிக்கும் வேள்வி தீதற முயலின் ஐய
சிந்தை நோய் தீரும் என்றறன்

He then advised him to invite the great tapasvin Rishya Srunga for the Yaga. This Rishya Srunga was residing in the kingdom ruled by king Romapada, the son of Uttanapada in the line of the Great Manu. He had married Santa, the daughter of Romapada. Dasarata gladly accepted the advice and reached the king's court where he was received with all honour. He then told Romapada of the purpose of his visit and the latter promised him to send the sage. promise Dasarata returned to his city and awaited the arrival of Rishya Srunga.

Dasarata narrated his distress to Rishya Srunga who came in the time and requested him to perform the Rishya Srunga consented to do so, directed the Yaga and got the gift of the divine porridge which he divided and Kausalya gave distributed to the three wives of Dasarata.

Birth to Rama, Kaikeyi to Bharata and Sumitra to Lakshmana and Satrugna. Dasarata was greatly pleased.

Bharata had his education supervised by the most learned sage Vasishta. This is acknowledged by his contemporary swamitra as follows :-

திறையோடு மாசிரைஞ்சுஞ் செறிகழற்கால் தசாதனம்
பொறையோடுந் தொடர்மனத்தான் புதல்வரெனும் பெயரே
உறையோடு நெடு வேலோய் உபநயன விதிமுடித்து
மறையோடும் வித்திவிரை வளர்த்தானும் வசிட்டன் காண் !

This beautiful stanza shows that Visvamitra introduced Rama and Lakshmana to Janaka as those brought up by the sage Vasishta, who educated them in the Vedas and in other useful arts. It is needless to say that although the context was in respect of Rama and Lakshmana, it applies as well to the other two sons, namely Bharata and Satruguna.

*To Continue...*





வண்ணமயமான இயற்கை ஓவியத்தை முகப்பு படமாகக் கொண்டு 03.05.2023 அன்று 178ஆவது இதழாக வெளி வந்திருக்கும் உலகத் தமிழ் மின்னிதழ் படித்தேன் ...சுவைத்தேன்.

30 பக்கங்களில் முத்தான கட்டுரைகளைத் தாங்கி இந்த இதழ் வெளிவந்திருக்கிறது.

முதல் பகுதியான கொள்கை விளக்கக் குறிப்பில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னையின் குறிக்கோள்கள் அதன் செயல்பாடுகளைப் படித்து தமிழாய்வு மத்திய நிறுவனத்தை நாம் இன்னும் அதிகமாக தெரிந்து கொள்ள முடிந்தது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகளை நூலேணிப் பகுதியில் வெளி வருவது சிறப்பான ஒன்றுதான்.

மகாகவி பாரதி, பாவேந்தர் பாரதிதாசன் ஆகியோரின் கவிதை வரிகளில் தமிழெழுச்சிப் பகுதி தொடர்ந்து சிறப்பாக இருந்து வருகிறது.

இந்த வார இதழில் ஆசிரியம் பகுதியில் ஒரு சுவையான எழுத்து ஓவியத்தை படிக்க நேர்ந்தது.

காணாமல் போகும் கழுதை இனம் என்ற தலைப்பிலான இந்த கட்டுரை நிறைய செய்திகளை படிக்க தந்திருக்கிறது.

23.04.2023 அன்றைய இந்து தமிழ் நாளிதழில் வெளியான எழுத்தாளர் தேவதை பட்டின நாயக் என்பவரின் கட்டுரை பற்றிய இப்பகுதி சிறப்பாக இருக்கிறது. 30 ஆண்டுகளில் 90% கழுதை இனம் காணாமல் போயிருக்கும் அதிர்ச்சி தகவலைப் படிக்க நேர்ந்தது.

பொதி சுமக்கும் இயந்திரங்களும் சுவைத்த துணிகளை சுருக்கம் நீக்கும் கருவிகளும் கழுதைக் கலாச்சாரத்தை மாற்றிவிட்டன என்கின்ற கவிநயமான வரி உண்மைதான்.



கழுதை இனம் பற்றிய கட்டுரையில் உலகில் இருக்கின்ற பல நாடுகளில் கழுதை இனங்களின் பயன்பாடுகளை ஆசிரியம் பகுதியில் விரிவாக படிக்க நேர்ந்தது.

30 ஆண்டுகளில் 90% கழுதை இனம் காணாமல் போய் இருப்பது என்ற செய்தியை படிக்கிற போது எனக்கு முன்பொரு முறை ஒரு இதழில் படித்த செய்தி ஒன்று நினைவுக்கு வருகிறது

அதாவது வீட்டில் வளர்க்கக்கூடிய பூனை இனங்களும் குறைந்து வருவதாக படித்திருக்கிறேன்.இவைகளெல்லாம் வீட்டுப் பிராணிகளன்றோ?

கழுதையைப் பற்றி இன்னொரு சுவையான ஒரு தகவல்...

அதாவது கிராமங்களில் ஆண் குழந்தை பிறந்து விட்டால் அந்தக் குழந்தைக்கு கழுதைப் போல் கொடுப்பது வழக்கமாக இருந்திருக்கிறது. இதற்காக கழுதை வளர்ப்பவனைத் தேடித்தேடி அவன் எவ்வளவு விலை சொன்னாலும் கழுதைப் பாலை வாங்கி வந்து குழந்தைகளுக்கு கொடுக்கும் பழக்கம் இருந்திருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னும் கழுதையை நாம் ஒரு அழகற்ற மிருகமாக பார்த்தாலும் குட்டியாக இருக்கிற போது கழுதை அதாவது கழுதைக் குட்டி ரொம்ப அழகாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. முன்னே போனால் கடிக்கும் பழக்கமும் பின்னே நின்றால் உதைக்கும் பழக்கமும் கழுதைக்குண்டு.

இப்படி ஆசிரியம் பகுதியில் கழுதை இனம் பற்றி படிக்கையில் பல சுவையான செய்திகளும் நினைவுகளும் நமக்கு வருகிறது.

தொடர்ச்சி அடுத்த பக்கம் . . .





அடுத்த பகுதியாக அவ்வப்போது பகுதியில் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாள் நிகழ்ச்சி தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பாக தூத்துக்குடியில் நடைபெற்றதை ஆசிரியர் பதிவு செய்திருந்தார்.

அடுத்த பகுதியாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் உரையை நாம் பார்க்கிறோம்...

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் உரையில் பல செய்திகளை நான் தெரிந்து கொள்கிறேன்.

இந்த வார இதழில் வெளியான மாண்புமிகு அமைச்சர் அவர்களின் உரையிலிருந்து பண்டித நேரு அவர்களைப்பற்றி "அவர் கட்டி முடிக்கப்பட்ட கோபுரம், நான் கொட்டி வைக்கப்பட்டிருக்கக் கூடிய செங்கல்" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் உரையில் நான் படித்து பெருமகிழ்ச்சி அடைந்தேன்.

இன்னும் அந்த உரையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மனோகராவின் திரைப்பட வசனம் இடம் பெற்றிருப்பது அருமையாக இருந்தது.

தேன் துளி முதல் பகுதியில் இலக்கிய மாநகரம் என்றால் டப்ளின்–ஐ கூறுவார்கள். இங்கே பிறக்கும் போதே எழுத கற்றுக் கொள்கிறார்கள் செய்தி  புதுமையாக எனக்கு இருந்தது .

தேன் துளி இரண்டில் இயற்கையைப் பரிவோடு உயர்த்தி வாழும் வாழ்வு தான் செம்மாந்த வாழ்வு என்ற வரி கல்வெட்டில் பதிக்கக்கூடிய வரியாக எனக்குப்படுகிறது.



கட்டுரைகளை பார்க்கையில் ,சொற்கள் ஒலிக்கப்பட வேண்டிய முறை பற்றி வழக்கியல் வல்லுனர் செந்தமிழ்த் திலகம் திரு. செல்லத்தம்பி  சிறீக்கந்தராசா அவர்கள் ஆங்கிலம் அரும்பிய அரசும் – வாழ்வும் என்ற பகுதியில் சிறப்பாக சொல்லி இருக்கிறார்.

இதே போல இன்னொரு கட்டுரையில்" மொழி எழுத்துக்களில் பலவகையான ஒளிச் சுருக்கங்கள் திரிபுகள் ஏற்படுவதை பேச்சுத் தமிழ் என்ற கட்டுரையில் பெரும் பேராசிரியர் செ.இரா. செல்வகுமார் விவரித்து சொல்லுகிறார்.

தேங்காயை உடைத்துப் பார்த்தால் உள்ளெல்லாம் மாணிக்க கற்கள் போலத்தான் வாகீச கலாநிதி கி.வா.ஜா' வின் எல்லாம் தமிழும் என்ற கட்டுரையில் மாணிக்கச் சொற்களாகவே ஒளிர்கிறது.

இன்னும் கட்டுரையாசிரியர்கள் மறைமலையடிகளார், முனைவர் தேவி நாச்சியப்பன், செவ்விசை மாமணி திருமதி. சீதை மெய் கண்டான், மூதறிஞர்.வ. சுப மாணிக்கனார் ஆகியோரின் எழுத்தோவியங்கள் சிறப்பு தான்.

நிறைவு பகுதிகளான அறிவரசன் மொழியாக்கத் துணை அகராதியும் இரு மொழித் தோரணமும் வழக்கம் போலவே இதழுக்கு அணி சேர்க்கின்றன.

நன்றி.

கவிஞர் பேரா,
தலைவர்,
பொதிகைத் தமிழ்ச் சங்கம், திருநெல்வேலி.




முனைவர் வி.அன்புமணி
இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர்,
இந்தி மற்றும் இதர மொழிகள் துறை,
கொங்கு கலை அறிவியல் கல்லூரி ( தன்னாட்சி), ஈரோடு.

பகுதி 57

109

மைதிலி சரண் குப்தரின் பஞ்சவடி

(குறுங்காவியம்)



## 113

மரங்கள் அடர்ந்த சைலமே
அவளிரு தோள்களுக்கு நிகராம்.
கூரிய நகங்கள்
அவள் நாமந்தனை
ஒத்ததைக் கண்டராம்
பீதி, வியப்பு, அறுவெருப்பு
உணர்வுக் குவியல்கள் அதீதமாய்
மையம் கொண்டன பிராட்டியிடம்.
மிடற்றும் மௌனித்துப் போக
அதிர்ந்த நிலையில்
சாய்ந்து சரணடைந்தாள்
ஆறுதல் தேடி தாய் மடியில்.



## 114

அண்ணலும் இளவலும்
ஒருவரை மற்றவர் நோக்கினர்.
மிதிலை இளவரசி
மைதிலியை நோக்கி
ஆதுரப் பார்வை வீசினர்.
விழிகளை இடம் மாற்ற
கோரிக்கை வைத்தனர்.
பதியின் முறுவல் கண்டு
பயம் தெளிந்தனள் ஜானகி.
எச்சரிக்கை செய்தி விடுக்க
சூர்ப்பனகை புறம்
திரும்பினன் இலக்குவன்.



வளரும்........



## “ஒரு சர்வாதிகாரியின் மறுபக்கம்”

*சிந்தனைச் செம்மல் செங்கோட்டை சனார்த்தனன்*

70



சர் சி பி யின் சொற்பொழிவைக் கேட்க நானும் சென்றிருந்தேன். அரங்கம் நிரம்பி வழிந்தது. கொலம்பியா பல்கலைக்கழகத்தின் மிகப்பெரிய அரங்கம் இது. சுமார் 5000 பேர் வந்திருந்தனர். சர் சி பி தமக்கே உரிய கம்பீரமான குரலில் பொருள் பொதிந்த சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தினார்.

### வேலை தேடும் படலம் :

1949 அக்டோபரில் நான் சர் சி பி க்கு ஒரு கடிதமெழுதினேன். சார் நான் என் அமெரிக்க மேற்படிப்பை முடித்துவிட்டு இந்தியா திரும்பிய பின், திருவிதாங்கூர் அரசில் பணியாற்ற விரும்புவதாகக் கூறி பல கடிதங்கள் எழுதினேன்.

ஒரு பதிலுமில்லை. எனவே மாநிலத்திற்கு வெளியே வேலை தேட வேண்டிய கட்டாயத்தினுள்ளேன் என எழுதியிருந்தேன்.

திருவிதாங்கூருக்கு வெளியில் நான் வேலை தேடுவதில் தமக்கு மிகுந்த வருத்தம் என்றும் உதவி ஏதாவது தேவைப்படுமாயின் அவருக்கு எழுதுமாறும் பதில் எழுதினார். 1950 இல் நான் இந்தியாவிற்கு வந்தேன். நேஷனல் கெமிக்கல் லாபரட்டரியில் சீனியர் சயின்டிபிக் ஆபீசராக மத்திய சர்க்கார் சென்னை நியமனம் செய்துள்ள விபரத்தை நான் சர் சி பி க்குத் தெரியப்படுத்தினேன்.

அதற்கு மறுமொழியாகப் பாராட்டுக் கடிதமொன்றை அனுப்பியிருந்தார் சர் சி பி. அதன் பின் இராண்டாண்டுகளுக்கிடையில் சர் சி பி சொற்பொழிவுகளுக்காக பூனா வரும்போதெல்லாம் நான் அவரை சந்திப்பதுண்டு.

### அண்ணாமலையிலிருந்து ஒரு அவசர அழைப்பு :

1953 இல் ஜனவரியில் சர் சி பி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தரானார். திடீரென ஒரு நாள் அவரிடமிருந்து ஒரு கடிதம். அடுத்த இரண்டு நாட்களில் நான் அவரை அண்ணாமலையில் சந்தித்தேன்.



அவருடைய விருந்தினராக துணைவேந்தரின் பங்களாவில் தங்கினேன். சர் சி பி அவசரமாக என்னை அழைத்ததற்கு ஒரு காரணம் இருந்தது. அங்குள்ள பேராசிரியர்களுள் முதுநிலை பேராசிரியராக என்னை நியமிக்க அவர் விரும்பினார்.

அதை அவர் கூறிய போது வியப்பு மிகுதியால் பேச முடியாது தவித்தேன். பின் அவரிடம் "சார் தாங்கள் என்னை இவ்வாறு நியமனம் செய்வதன் நோக்கம் என்ன என்பதை நான் தெரிந்து கொள்ளலாமா!" என்று கேட்டேன்.

*வளரும் . . . .*





வாகீச கலாநிதி கி.வா.ஜ.



அந்தக் கவிராயரைப் பிரிந்து அவள் வாழ்வது கிடக்கட்டும்; ‘பாட்டுக் கிசைந்த ரகுநாத சேதுபதி' எப்படி வாழ்கிறார்? சேது சம்ஸ்தானத்தில் கவிராயர் பலர் உண்டு; வெளியூரிலிருந்தும் வருவார்கள். ஆனால் அமிர்தக் கவியின் அமுத கவி இருந்தால்தான் அரசருக்கு இன்பம் நிறைவடையும்.




இந்தப் பழங்கதையையெல்லாம் அவள் நினைத்துப் பார்த்தாள். அந்த நினைவுலகத்திலிருந்து உண்மை உலகத்துக்கு இறங்கி வருகையில் நிலை குலைந்து பெரு மூச்சு விடுகிறாள். வேறு என்ன செய்வாள், பாவம்! கவிராயர் மனைவியை ரகுநாத சேதுபதி அருமை யாகப் பாதுகாத்து வந்தார். கவிராயர் இல்லாத குறையைத் தவிர அந்தப் பெண்மணிக்கு வேறு ஒன்றலும் குறை வைக்கவில்லை.

அந்த அம்மைக்குத் தன் குழந்தையிடம் இருந்த அன்பு பெரிதுதான்; ஆனாலும் அமிர்த கவிராயர் கான்முளை வருங்காலத்தில் அவர் பெயரைக் காப்பாற்றுவான், சம்ஸ்தானத்துக்குப் புகழ் உண்டாக்குவான் என்ற ஆர்வத்தோடு சேதுபதி அந்தக் குழந்தையைப் பாதுகாக்கவேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தாரே; அது மாத்திரம் சாமானியமான அன்பா ?

அரண்மனைக்கு அருகில் அந்த வீடு இருந்தது. கவிராயருடைய மனைவி ஒரு கிழவியோடு வாழ்ந்து வந்தாள். கூடத்திலே தொட்டிலைக் கட்டி அதிலே குழந்தையை விட்டுத் தாலாட்டிக் கொண்டிருந்தான். கூடத்துச் சுவரின் சாளரத்து வழியே பார்த்தால் அரண்மனையின் மேற்பகுதி தெரியும்.

பழைய ஞாபகத்திலே தோய்ந்தெழுந்த உள்ளத்தில் உற்சாகம் பிறக்கும்; உடனே தன்னையும் அறியாமல் உச்ச ஸ்தாயியிலே அவள் தாலாட்டைப் பாடுவாள்.

அப்போது அவள் கண்ணில் திடீரென்று ஒரு மருட்சி தோன்றியது. தொட்டிலின்மேல் அவள் கண் ஓடியது: அப்பால் சுவரிலே பாய்ந்தது; சாளரத்திலே சென்றது; அதனூடே கூர்ந்து கவனித்தது. சாளரத்தின் வழியே வந்த ஒரு பிரகாசந்தான் அவளை அப்படிப் பார்க்கச் செய்தது. ஒளிக்கதிர் தொட்டிலின் மேலே விழுந்ததை அவள் கண்டாள். சாளரத்தின் வழியே அந்தக் கதிர் வந்தது. எங்கிருந்து வந்த தென்று ஆராய்ந்தாள். அரண்மனையின் மேல் மாடியிலே ரகுநாத சேதுபதி கைபிடிச் சுவரின் மேலே சாய்ந்துகொண்டு தாலாட்டுப் பாட்டைக் கேட்டு ரசித்துக்கொண்டிருந்தார், கைபிடியின்மேல் வைத்த கையில் மிக உயர்ந்த கற்கட்டு மோதிரம் அணிந்திருந்தார். எதிரே வீசிய சூரியனது கதிர் அதிலே பட்டுப் பளபளத்தது. லிருந்து கிளம்பிய கதிர் அவர் உள்ளத்தைப் போல அதி சாளரத்தின் வழியே புகுந்து தொட்டிலிலே, படர்ந்தது.

கவிராயர் மனைவி உண்மையை உணர்ந்தான். ஆனாலும் அதைத் தெரிந்துகொண்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை. பழைய ஞாபகங்களைச் சற்று மறந்து பாட்டிலே நிலைகொண்டாள். — பழைய பாட்டோடு புதிய பாட்டையும் இணைத்துப் பாடினாள். கவிராயச் மனைவி அல்லவா?

அதுவரையில் தம்மை மறந்து கவனித்துக்கொண்டிருந்த மன்னர் திடீரென்று உடம்பு குலுங்க நிமிர்ந்து நின்றார். பாட்டின் ஒரு கண்ணி அவரை அப்படிச் செய்துவிட்டது. ஆம். அந்தப் பெண்மணி, இதோ மூன்றாம் முறையாகப் பாடுகிறாள் : திக்கெட்டும் போற்றிசெய்யும் சேதுபதி ராசேந்திரன் கற்கட்டு மோதிரத்தைக் கண்டாசைப் பட்டாயோ என்ற கண்ணி இப்போது தெளிவாக அவர் காதில் விழுந்தது. ஒவ்வொரு சொல்லும் மணி மணியாக அந்தப் பெண்ணின் வாயிலிருந்து உதிர்ந்தது; அப்போது அரசருடைய கண்ணிலிருந்து இரண்டு துளி நீர் உதிர்ந்தது.

“கம்பன் வீட்டுக் கட்டுத் திறியும் கவி பாடும்" என்ற பழமொழி அவர் நினைவுக்கு வந்திருக்க வேண்டும். விறுவிறென்று இறங்கினார். கீழே போய் ஓர் அழகிய தட்டில் பணமும் ஆடையும் வைத்தார் ; தம் கையிலே இருந்த மோதிரத்தைக் கழற்றி அவற்றின் நடுவிலே வைத்தார். தக்க மனிதர் ஒருவரை அழைத்து, இந்தாரும். கவிராயர் மனைவியாரிடம் கொண்டு போய்க் கொடும். கற்கட்டு மோதிரத்தை கண்டு ஆசைப்பட்ட குழந்தைக்கு மகாராஜா சம்மானம் செய்திருக்கிறார் என்று சொல்லும்” என்று தழுதழுத்த குரலிலே கூறி அனுப்பினார்.

*வளரும் . . . .*

**திரு. ச. க. அறிவரசன்,** எம்.ஏ. (ஆங்கிலம்), எம்.ஏ. (தமிழ்), எம்.எல்.இ., பி.எட்.

தலைமைச் செயலகத்தின் மொழிபெயர்ப்புத்துறையில் துணை இயக்குநராக அரும்பணியாற்றியவர். அவர் 1982ஆம் ஆண்டு தொகுத்து வைத்திருந்த அகராதிச் சொற்களை அவர் நினைவாக வெளியிடுகிறோம்.



| | | |
|---|---|---|
| 2161 | Civil Court | உரிமை வழக்கு நீதிமன்றம் |
| 2162 | Civil Prisoners | கடன் கைதிகள் |
| 2163 | Civill Supplies | உணவுப் பொருள் வழங்கல் |
| 2164 | claims enquiry officer | இழப்பீட்டுத் தொகை விசாரணை அதிகாரி |
| 2165 | claims settlement commissioners (sanctioning authorities) | இழப்பீட்டுத் தொகையை முடிவு செய்யும் ஆணையர்கள் (ஒப்பளிப்பு வழங்கும் அதிகாரிகள்) |
| 2166 | Claims tag | பயணப்பொருள் அடையாளச் சீட்டு |
| 2167 | claims tribunal | இழப்பீட்டு கோரிக்கை நடுவர் மன்றம் |
| 2168 | Class | பதவி வகை |
| 2169 | class banking | குறிப்பிட்டோருக்கு மட்டும் வங்கிச் சேவை |
| 2170 | Classification, control and Appeal Rules (CCA Rules) | வகைப்பாடு, கட்டுப்பாடு, மேல்முறையீட்டு விதிகள் |
| 2171 | Clause | பிரிவு |
| 2172 | Clayey soil | களிமண் கலந்த மண் |
| 2173 | Clear felling | அறுவெட்டு முறையில் மரங்களை வெட்டுதல் |
| 2174 | Clearing and forwarding license | சரக்குகளைக் கப்பலில் ஏற்றி இறக்குவதற்குரிய உரிமம் |
| 2175 | Clearing nut | தேற்றாங்கொட்டை |




22



# புகழ் வணக்கம்

தினமணி செவ்வாய்க்கிழமை 22–11–2022

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை

நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## இனி நினைவில் நடமாடுவார்!

மேடைப் பேச்சின் முன்னோடி 'தமிழ்த் தென்றல்' திரு.வி.க என்பார்கள். சொல்லின் செல்வர் என்று அழைக்கப்பட்டவர் ரா.பி. சேதுப்பிள்ளை; உரையாற்றலின் உன்னதம் என்று அண்ணாவின் மேடைத் தமிழ் போற்றப்படுகிறது.

அந்த வரிசையில் ஏற்றிப் போற்றும் தகுதி பெற்ற தகைமைசால் தமிழர் அவ்வை நடராசன் தம்மிடமிருந்தும், தமிழ் மேடைகளிடமிருந்தும் பிரியா விடை பெற்று அமரராகி இருக்கிறார்.

அகவை 85, உடல்நலக் குறைவு; வயது மூப்பு காரணமாக அமரரானார் என்கிற செய்திக் குறிப்பு தெரிவிக்காமல் விட்டுவிட்ட இன்னொரு தகவல் உண்டு. அது. கொள்ளை நோய்த்தொற்றுக்குப் பின் அவரது தமிழ் வலம் வர மேடைகள் இல்லாமல் போனதும்கூட அவர் தம்மைவிட்டுப் பிரிந்ததற்குக் காரணமாக இருக்கக்கூடும் என்பது.

கொள்ளை நோய்த்தொற்று, துணைவியாரை அவரிடமிருந்து பிரித்துச் சென்றதன் துயரமும் சேர்ந்து கொண்டபோது, விழுது பாய்ச்சிப் பரந்து விரிந்திருந்த அவ்வை நடராசன் என்கிற ஆலமரத்தின் வேர்கள் அசைந்து, நலிந்து விட்டன...

'உரைவேந்தர்' ஔவை துரைசாமிப் பிள்ளையின் புதல்வராக நடராசன் பிறந்தபோது, அவர் வள்ளுவரின் "தம்மின்தன் மக்கள் அறிவுடைமை " என்கிற குறளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கப் போகிறார் என அந்த அறிவுசார் தந்தையார் நினைத்திருந்தாரா என்று தெரியாது. ஆனால், அதுதான் நிகழ்ந்தது.

பேராசிரியராகவும், உரையாசிரியராகவும் திகழ்ந்த ஔவை துரைசாமிப் பிள்ளையின் மகன் அவ்வை நடராசன், தமிழ்பேசும் மண்ணையெல்லாம் தன் உரைவீச்சால் மயக்கிய அதிசயத்தை உலகம் வியந்து பார்த்தது.

அவ்வை நடராசனின் கால் பதியாத இடம் தமிழகத்தில் ஏதாவது உண்டா ? அவரது குரல் வழங்கா கிராமம் உண்டா ? அவரது பெயர் தெரியாத தமிழன் தான் இருந்துவிட முடியுமா ? கடந்த அரை நூற்றாண்டு காலமாகத் தமிழ் அமைப்பு எதுவாக இருந்தாலும் அது அவ்வை நடராசனின் பங்களிப்பு இல்லாத அமைப்பாக இருந்ததில்லை.

விரிவுரையாளராக, வானொலி செய்தி அறிவிப்பாளராக, பேராசிரியராக என்று அவரது தொடக்கம் இருந்தாலும், சென்னை இராமலிங்கர் பணி மன்றத்தின் செயலாளராக அருட்செல்வர் நா. மகாலிங்கத்தின் தொடர்புக்குப் பிறகு தான், நடராசனாரின் வாழ்க்கை புதிய பாதையில் பயணிக்கத் தொடங்கியது. அதுவரை தமிழ் இலக்கியம் சார்ந்த அவரது பார்வை வள்ளலாரிலும், காந்தியத்திலும் திரும்பியபோது, புதிய பரிமாணம் எழுந்தது.

தமிழறிஞர்கள் பலர் இல்லாமல் இல்லை. ஆனால், அவ்வை நடராசன் போன்ற தமிழறிஞர்கள் வேறு எவரும் இருந்ததில்லை. அதற்குக் காரணம் அவரது விரிந்து பரந்த பார்வையும், தெளிந்த நீரோடை போன்ற உள்ளமும், ஆழங்காற்பட்ட புலமையும் !

இலக்கியம் தெரிந்ததுபோலவே, இங்கிதமும் தெரிந்திருந்தது அவருக்கு என்பதால் தான் எதிர் எதிர் துருவங்களிடமும் கூட அவரால் நம்பிக்கைக்கு உகந்தவராகத் திகழ முடிந்தது.

தமிழக அரசின் மக்கள் செய்தி தொடர்புத் துறையில் அவர் கருணாநிதியின் ஆட்சியில் பணியமர்த்தப்பட்டார். அன்று தொடங்கிய அவர்களது நெருக்கம் தலைமுறை கடந்தும் தொடர்ந்தது.

கருணாநிதி ஆட்சியில் பணியமர்த்தப்பட்ட அவ்வை நடராசன், அதற்குப் பின் வந்த எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் மொழி பெயர்ப்புத் துறை இயக்குநராகவும், தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் பண்பாட்டுத் துறை செயலாளராகவும் இருந்தார்.

தொடர்ச்சி அடுத்த பக்கம் . . . .

## புகழ் வணக்கம் . . . .



ஜெயலலிதா தலைமையிலான ஆட்சியின்போது தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக அவர் நியமிக்கப்பட்டார். கருணாநிதி ஆட்சியில் நடந்த செம்மொழி மாநாட்டில், அவருக்கு முக்கியமான இடம் வழங்கப்பட்டது. அரசியலுக்கு அப்பாற்பட்டு, மனமாச்சரியங்களைக் கடந்து கருணாநிதி, எம்.ஜி.ஆர், ஜெயலலிதா மூவராலும் அவ்வை நடராசனின் தமிழ் மதிக்கப்பட்டது, அங்கீகரிக்கப்பட்டது என்பதன் வெளிப்பாடு தான் அது.

எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் மதுரையில் நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டிலும் சரி, அதற்குப் பிறகு ஜெயலலிதா ஆட்சியின் போது தஞ்சையில் நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டிலும் சரி, கருணாநிதி ஆட்சியில் கோவையில் நடந்த செம்மொழித் தமிழ் மாநாட்டிலும் சரி, அவ்வை நடராசன் பெரும் பங்கு வகித்தார் என்பது அவரது தமிழாளுமையின் அடையாளம்.

உலகில் தமிழ் மாநாடு எங்கே நடந்தாலும், அதில் அவ்வையின் பங்களிப்பு இல்லாமல் இருந்ததில்லை.

பட்டிமன்றம் என்கிற சொற்பொழிவுக் கலையின் தனித்துவத் தமிழ் வடிவம் இன்று தமிழ் அடையாளமாக மாறி இருப்பதற்கு அவ்வை நடராசனின் பங்களிப்பு அளப்பரியது.

பட்டிமன்ற நடுவர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு தவத்திரு குன்றக்குடி அடிகளார் இலக்கணம் வகுத்தார் என்றால், அவ்வை நடராசன் அதன் இலக்கியமாக அமைந்தார்.

நூற்றுக்கணக்கான இளம் பேச்சாளர்கள் அவரால் அரங்கேறினார்கள். கைதட்டல்களால் அரங்கங்களை அதிர வைத்தார்கள்.

அது சங்கத் தமிழாக இருந்தாலும் சரி, சமயத் தமிழாக இருந்தாலும் சரி, கம்ப காதையாக இருந்தாலும் சரி. கண்ணகி காப்பியமானாலும் சரி, பாரதியோ, பாரதிதாசனோ, கண்ணதாசனோ யாராக இருந்தாலும் அவ்வை நடராசனின் நா நுனியில் வலம் வரும் வித்தை கலைவாணியின் அருள். அது அவ்வைக்கு மட்டுமே வாய்த்த வரம்.

தமிழக அரசின் மொழி பெயர்ப்புத் துறை இயக்குநராக இருந்து ஆட்சித் தமிழுக்கு அவ்வை நடராசன் வழங்கியிருக்கும் வார்த்தைக் கொடைகள் ஏராளம், ஏராளம். அது தமிழோ, ஆங்கிலமோ சரளமாகப் பேசுவது மட்டுமல்லாமல், ஆழங்காற்பட்ட புலமையுடன் வலம் வந்தார்.அவர் என்பதை நினைவுகூராமல் இருந்துவிட முடியாது.

கம்பரைப் பற்றி பேசும்போது மில்டனையும், பாரதி குறித்து உரையாற்றும்போது ஷெல்லியையும் அவ்வப்போது மேற்கோள் காட்டுவது அவ்வையின் தனிச்சிறப்பு.

அவரால் எது குறித்தும் பேச முடியும் விவாதிக்கவும் முடியும். அவரது நகையுணர்வு மிக்க சொல்லாடலில் மயங்காதவர் கிடையாது. யார் குறித்தும் அவர் அவதூறு கூறி கேட்டிருக்க முடியாது.

“இயன்றவரை பாராட்டுவது, தகுதியற்றவை குறித்து மௌனம் காப்பது” என்பதை தனது வாழ்க்கைச் சித்தாந்தமாகவே கொண்டிருந்த மாமனிதர் அவ்வை நடராசனார் என்பதை அவரைத் தெரிந்தவர்கள் அறுதியிட்டுக் கூறுவார்கள்.

“தமிழ் உட்கார தன் நாக்கையே நாற்காலியாகக் கொடுத்தவன் இவன்: இவன் விரல் நுனியில் இலக்கணம் இருக்கிறது. குரல் நுனியில் இலக்கியம் இருக்கிறது" என்று கவிஞர் வாலியும்,

"எதுவரைக்கும் தமிழறிஞர் இந்த நாளில் ஏற்றமிகக் கொண்டிருப்பார் என்று கேட்டால், இதுவரைக்கும் என்றெடுத்துக் காட்ட இங்கே இவரைத்தான் நான் சுட்டிக் காட்டுகின்றேன், மது கரக்கும் தமிழ்ப் பேச்சால், மதியின் மாண்பால், மணிகொழிக்கும் உரைவீச்சால், தேன் கனிந்த அதிமதுரக் கவிபோலப் பழகும் இந்த அவ்வை நடராசன் என்றும் வாழ்க!” என்று கவிஞர் சுரதாவும் வாழ்த்தி மகிழ்ந்த, நாம் வாழும் காலத்தில் வாழ்ந்த பேராசான் விடிவெள்ளியாய் எழுந்து, கதிரோன் போல் ஒளிவீசி, காரிருளில் கலந்துவிட்டார். நிகர் என்று சொல்ல வேறொருவர் இல்லாமைதான் ஆளுமை;

**அவ்வை நடராசன் தன்னிகரில்லா தமிழ் ஆளுமை!**

நாளிதழ் செய்தி அடுத்த பக்கம் . . . .

# தினமணி

திமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

செவ்வாய்க்கிழமை 22-11-2022
சுபகிருது கார்த்திகை 6 ஹிஜ்ரி 1444 ரபீயுல் ஆகிர் 27

## இனி, நினைவில் நடமாடுவார்!

மேடைப் பேச்சின் முன்னோடி 'தமிழ்த் தென்றல்' திரு.வி.க. என்பார்கள்; 'சொல்லின் செல்வர்' என்கிற அடைமொழியுடன் அழைக்கப்பட்டவர் ரா.பி. சேதுப்பிள்ளை; உரையாற்றலின் உன்னதம் என்று அண்ணாவின் மேடைத் தமிழ் போற்றப்படுகிறது. அந்த வரிசையில் ஏற்றிப் போற்றும் தகுதி பெற்ற தகைமைசால் தமிழர் ஔவை நடராசன் நம்மிடமிருந்தும், தமிழ் மேடைகளிடமிருந்தும் பிரியா விடை பெற்று அமரராகி இருக்கிறார்.

ஔவை 86; உடல்நலக் குறைவு; வயது மூப்பு காரணமாக அமரரானார் என்கிற செய்திக் குறிப்பு தெரிவிக்காமல் விட்டுவிட்ட இன்னொரு தகவல் உண்டு. அது, கொள்ளை நோய்த்தொற்றுக்குப் பின் அவரது தமிழ் வலம்வர மேடைகள் இல்லாமல் போனதும்கூட அவர் நம்மைவிட்டுப் பிரிந்ததற்குக் காரணமாக இருக்கக்கூடும் என்பது. கொள்ளை நோய்த்தொற்று, துணைவியாரை அவரிடமிருந்து பிரித்துச் சென்றதன் துயரமும் சேர்ந்து கொண்டபோது, விழுது பாய்ச்சிப் பரந்து விரிந்திருந்த ஔவை நடராசன் என்கிற ஆலமரத்தின் வேர்கள் அசைந்து, தளர்ந்து விட்டன...

'உரைவேந்தர்' ஔவை துரைசாமிப் பிள்ளையின் புதல்வராக நடராசன் பிறந்தபோது, அவர் வள்ளுவரின் 'தம்மின்தம் மக்கள் அறிவுடைமை' என்கிற குறளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கப் போகிறார் என அந்த அறிவுசார் தந்தையார் நினைத்திருந்தாரா என்று தெரியாது. ஆனால், அதுதான் நிகழ்ந்தது. பேராசிரியராகவும், உரையாசிரியராகவும் திகழ்ந்த 'ஔவை' துரைசாமிப் பிள்ளையின் மகன் ஔவை நடராசன், தமிழ்பேசும் மண்ணையெல்லாம் தன் உரைவீச்சால் மயக்கிய அதிசயத்தை உலகம் வியந்து பார்த்தது.

ஔவை நடராசனின் கால் பதியாத இடம் தமிழகத்தில் ஏதாவது உண்டா? அவரது குரல் முழங்கா கிராமம் உண்டா? அவரது பெயர் தெரியாத தமிழன்தான் இருந்துவிட முடியுமா? கடந்த அரை நூற்றாண்டு காலமாகத் தமிழ் அமைப்பு எதுவாக இருந்தாலும் அது ஔவை நடராசனின் பங்களிப்பு இல்லாத அமைப்பாக இருந்ததில்லை.

விரிவுரையாளராக, வானொலி செய்தி அறிவிப்பாளராக, பேராசிரியராக என்று அவரது தொடக்கம் இருந்தாலும், சென்னை இராமலிங்கர் பணி மன்றத்தின் செயலாளராக, 'அருட்செல்வர்' நா. மகாலிங்கத்தின் தொடர்புக்குப் பிறகுதான், நடராசனாரின் வாழ்க்கை புதிய பாதையில் பயணிக்கத் தொடங்கியது. அதுவரை தமிழ் இலக்கியம் சார்ந்த அவரது பார்வை வள்ளலாரிலும், காந்தியத்திலும் திரும்பியபோது, புதிய பரிமாணம் எடுத்தது.

தமிழறிஞர்கள் பலர் இல்லாமல் இல்லை. ஆனால், ஔவை நடராசன் போன்ற தமிழறிஞர்கள் வேறு யாரும் இருந்ததில்லை. அதற்குக் காரணம் அவரது விரிந்து பரந்த பார்வையும், தெளிந்த நீரோடை போன்ற உள்ளமும், ஆழங்காற்பட்ட புலமையும்! இலக்கியம் தெரிந்ததுபோலவே, இங்கிதமும் தெரிந்திருந்தது அவருக்கு என்பதால்தான் எதிர் எதிர் துருவங்களிடமும்கூட அவரால் நம்பிக்கைக்கு உகந்தவராகத் திகழ முடிந்தது.

தமிழக அரசின் மக்கள் செய்தி தொடர்புத் துறையில் அவர் கருணாநிதியின் ஆட்சியில் பணியமர்த்தப்பட்டார். அன்று தொடங்கிய அவர்களது நெருக்கம் தலைமுறை கடந்தும் தொடர்ந்தது. கருணாநிதி ஆட்சியில் பணியமர்த்தப்பட்ட ஔவை நடராசன், அதற்குப் பின் வந்த எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் மொழி பெயர்ப்புத் துறை இயக்குநராகவும், தமிழ் வளர்ச்சித்துறை மற்றும் பண்பாட்டுத் துறை செயலாளராகவும் இருந்தார்.

ஜெயலலிதா தலைமையிலான ஆட்சியின்போது தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக அவர் நியமிக்கப்பட்டார். கருணாநிதி ஆட்சியில் நடந்த செம்மொழி மாநாட்டில், அவருக்கு முக்கியமான இடம் வழங்கப்பட்டது. அரசியலுக்கு அப்பாற்பட்டு, மனமாச்சரியங்களைக் கடந்து கருணாநிதி, எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா மூவராலும் ஔவை நடராசனின் தமிழ் மதிக்கப்பட்டது, அங்கீகரிக்கப்பட்டது என்பதன் வெளிப்பாடுதான் அது.

எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் மதுரையில் நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டிலும் சரி, அதற்குப் பிறகு ஜெயலலிதா ஆட்சியின்போது தஞ்சையில் நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டிலும் சரி, கருணாநிதி ஆட்சியில் கோவையில் நடந்த செம்மொழித் தமிழ் மாநாட்டிலும் சரி, ஔவை நடராசன் பெரும் பங்கு வகித்தார் என்பது அவரது தமிழாளுமையின் அடையாளம். உலகில் தமிழ் மாநாடு எங்கே நடந்தாலும், அதில் ஔவையின் பங்களிப்பு இல்லாமல் இருந்ததில்லை.

பட்டிமன்றம் என்கிற சொற்பொழிவுக் கலையின் தனித்துவத் தமிழ் வடிவம் இன்று தமிழ் அடையாளமாக மாறி இருப்பதற்கு ஔவை நடராசனின் பங்களிப்பு அளப்பரியது. பட்டிமன்ற நடுவர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு தவத்திரு குன்றக்குடி அடிகளார் இலக்கணம் வகுத்தார் என்றால், ஔவை நடராசன் அதன் இலக்கியமாக அமைந்தார். நூற்றுக்கணக்கான இளம் பேச்சாளர்கள் அவரால் அரங்கேறினார்கள். கைதட்டல்களால் அரங்கங்களை அதிர வைத்தார்கள்.

அது சங்கத் தமிழாக இருந்தாலும் சரி, சமயத் தமிழாக இருந்தாலும் சரி, கம்ப காதையாக இருந்தாலும் சரி, கண்ணகி காப்பியமானாலும் சரி, பாரதியோ, பாரதிதாசனோ, கண்ணதாசனோ யாராக இருந்தாலும் ஔவை நடராசனின் நா நுனியில் வலம் வரும் வித்தை கலைவாணியின் அருள். அது ஔவைக்கு மட்டுமே வாய்த்த வரம்.

தமிழக அரசின் மொழி பெயர்ப்புத் துறை இயக்குநராக இருந்து ஆட்சித் தமிழுக்கு ஔவை நடராசன் வழங்கியிருக்கும் வார்த்தைக் கொடைகள் ஏராளம், ஏராளம். அது தமிழோ, ஆங்கிலமோ சரளமாகப் பேசுவது மட்டுமல்லாமல், ஆழங்காற்பட்ட புலமையுடன் வலம் வந்தார் அவர் என்பதை நினைவுகூராமல் இருந்துவிட முடியாது.

கம்பனைப் பற்றி பேசும்போது மில்டனையும், பாரதி குறித்து உரையாற்றும்போது ஷெல்லியையும் அவ்வப்போது மேற்கோள் காட்டுவது ஔவையின் தனிச்சிறப்பு. அவரால் எது குறித்தும் பேச முடியும்; விவாதிக்கவும் முடியும். அவரது நகைச்சுவை மிக்க சொல்லாடலில் மயங்காதவர் கிடையாது. யார் குறித்தும் அவர் அவதூறு கூறி கேட்டிருக்க முடியாது.

'இயன்றவரை பாராட்டுவது, தகுதியற்றவை குறித்து மௌனம் காப்பது' என்பதை தனது வாழ்க்கைச் சித்தாந்தமாகவே கொண்டிருந்த மாமனிதர் ஔவை நடராசனார் என்பதை அவரைத் தெரிந்தவர்கள் அறுதியிட்டுக் கூறுவார்கள்.

"தமிழ் உட்கார தன் நாக்கையே நாற்காலியாகக் கொடுத்தவன் இவன்; இவன் விரல் நுனியில் இலக்கணம் இருக்கிறது, குரல் நுனியில் இலக்கியம் இருக்கிறது" என்று கவிஞர் வாலியும்,

"எதுவரைக்கும் தமிழறிஞர் இந்த நாளில் ஏற்றமிகக் கொண்டிருப்பார் என்று கேட்டால், இதுவரைக்கும் என்றெடுத்துக் காட்ட இங்கே இவரைத்தான் நான் சுட்டிக் காட்டுகின்றேன். மது காக்கும் தமிழ்ப் பேச்சால்,

மதியின் மாண்பால், மணிதெறிக்கும் உரைவீச்சால், தேன் கனிந்த அதிமதுரக் கவிபோலப் பழகும் இந்த ஔவை நடராசன் என்றும் வாழ்க!" என்று கவிஞர் சுரதாவும் வாழ்த்தி மகிழ்ந்த, நாம் வாழும் காலத்தில் வாழ்ந்த பேரசான் விடிவெள்ளியாய் எழுந்து, கதிரோன்போல் ஒளிவீசி, காரிருளில் கலந்துவிட்டார். திகர் என்று சொல்ல வேறொருவர் இல்லாமைதான் ஆளுமை; ஔவை நடராசன் தன்னிகரில்லா தமிழ் ஆளுமை!





பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்

Doesn't this deep where waters well, look Lord and Consort
in covalent hold!Lush dark nenuphar and cool red lotus bloom on it!
Ripples bangle waving its scape. It looks the round arm
of a flowing stream! Serpents lace, coil in a mazy motion there.
To be rid of murk all dip, spirit and flesh! Let us fall!
Fall into the springs therein! Let our chank bangles sizzle
and gingle in chorus;anklets join to perform; breasts in concert heave;
waters swell; Lotus overtake the surface!
Delve in, bathe immerse, pAvAi

**English version Dr Arul**